
www.tamilarangam.net

# தூண்டில்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE


CARTOON: TIMES NEWS PAPERS / PETER BROOKS


53+54

Tamilische Zeitschrift

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காணாமல் போன கண்கள்



இந்த ஆண்டு இலங்கையரசு இலங்கையர்களின் 32 ஆயிரம் கண்களை வெளிநாடுகளுக்கு தானம் செய்திருக்கிறது. இலங்கையரின் விழிகளால் உலகைப் பார்க்கும் பேறுபெற்ற வெளிநாட்டவர்களையிட்டு நாம் பெருமை கொள்ள வேண்டும் என்று இலங்கைப் பத்திரிகைகள் எழுதின. உலகின் பார்வை அற்றோருக்கு பார்வை வழங்கும் புண்ணிய கைங்கரியத்தைச் செய்கின்ற இலங்கையரசின் பரந்து விரிந்த பார்வை நோக்கும் மனிதநேயத்தை என்னவென்று சொல்வது?

இத்தனை ஆயிரம் கண்களும் எவ்வாறு? எங்கு? பெறப்பட்டனவென்பது இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது. ஆனால் இதில் குறிப்பிட்ட பல நூற்றுக் கணக்கான கண்கள் வடக்கு, கிழக்கில் தொடரும் மனித வேட்டைகளின்போது தோண்டியெடுக்கப் பட்டன என்பது மறைந்துள்ள உண்மையாகும். மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் கண்களை இழந்து காணாமல் போன மனிதர்களின் குடும்பங்கள் இன்னமும் இருக்கின்றன மௌனமாய். வாய் திறந்தால் இருக்கின்ற கண்களும் இல்லாமல் போகலாம்.

சென்ற ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் மட்டக்களப்பை உலுக்கிக் குலுக்கிய நூற்றுக்கணக்கான மர்மக் கொலைகளை எவரும் மறக்க மாட்டார்கள். கண்கள் தோண்டப்பட்டு, தலையற்ற முண்டங்களாய் மட்டக்களப்பு நகரத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெருக்களிலும், வாவியிலும் கிடந்த பிணங்களை எப்படி மறக்க முடியும்.

குறிப்பிட்ட பல நாட்கள் பள்ளிக்கூடங்கள், ரியூட்டரிகள் தமிழ்க்கடைகள் என்பன மூடப்பட்டு நகரே வெறிச்சோடிப் போயிருந்தது. நாய்கள் கூட நடமாடுவதற்கு அஞ்சிய நாட்கள் அவை.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலிருந்தும், மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அருகிலிருந்தும் திடீரென வரும் வெள்ளை வான் ரியூட்டரி அருகிலும், வீதிகளிலும் செல்லும் பெண்களை குறிப்பாக மாணவிகளை, இளைஞர்களை தூக்கிப் போட்டுக்கொண்டு திடீரென மர்மமாய் மறைந்துவிடும். இரண்டு மூன்று தினங்களில் கோரத்தனமாய் சதைவெறிக்குப் பலியாகிப்போன பெண்களின் உடல்கள், இளைஞர்களின் உடல்கள் தலையற்ற முண்டங்களாய் காகங்கள் கொத்தி கரையொதுங்கும் வாவியின் ஓரங்களில். நகரவீதிகளில் அநாதரவாகக் கிடந்து நாறும்.

பெற்றோரும், பிள்ளைகளும் பல நாட்கள் அச்சத்துடனேயே வீடுகளில் அடைபட்டுக் கிடந்தார்கள். மட்டக்களப்பு நகருக்குள்ளேயே அலுவலகங்கள் திறந்து செயற்படும் ரெலோ, புளொட் இயக்க உறுப்பினர்கள் கூட இந்நாட்களில் தனியாக வெளியில் செல்வது மிகவும் குறைவு! "அவன் முனாஸ் தூக்கிப் போட்டுக்கொண்டு போனானென்டால் எங்களால ஒன்றும் செய்ய முடியாது. வெளில போறத குறச்சிக் கொள்ளுங்க" என்று இவ்வலுவலகங்களின் அங்கத்தவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டதாம் அந்நாட்களில்!!

யார் அந்த முனாஸ்? புலிகளுக்கும், இலங்கையரசுக்கும் "புனித யுத்தம்" தொடங்கப்பட்ட பிறகு முஸ்லீம்களின் நலனைக் கருத்திற் கொண்டு சபாநாயகர் எம்.எச். எம்.முகம்மது, முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஆகியோரின் அனுசரணையோடு, பிரேமதாசாவின் பணிப்பின் பேரில் முஸ்லீம்களின் நலன்களைப் பேணுதல் என்ற போர்வையில் தமிழர்களை அழித்தொழிக்க அனுப்பப்பட்ட சி.ஐ.டி. பொறுப்பதிகாரிதான் இந்த முனாஸ்.

இந்த முனாஸ் குழுவினரும், மட்டக்களப்பு புளொட் இராணுவப் பொறுப்பாளர் மோகன் (இந்தச் சம்பவங்கள் நிகழ்வதற்கு நாலைந்து நாட்களுக்கு முன் இவர் புளொட் தலைமையால் தற்காலிகமாக நீக்கப்பட்டதாக நீண்ட காலத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டது!!) குழுவினரும், ரெலோ

www.tamilarangam.net

விலிருந்து வெளியேறிய சிலரும் சேர்ந்தே மட்டக்களப்பில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான படுகொலைகள் பலவற்றின் சூத்திர தாரிகளாவர்.

ஏப்ரல், மே மாதங்களில் கண்கள் தோண்டப்பட்டு, தலையற்ற முண்டங்களாய் போடப்பட்ட படுகொலைகளைச் செய்தவர்களும் இவர்களே. கொழும்பிலிருந்து விசேடமாகச் சென்ற இராணுவ மெடிசன் குழுவினருடன் இணைந்தே இக் கண்கள் தோண்டியெடுக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தன.

மட்டக்களப்பில் நூற்றுக்கணக்கான கண்களைத் தோண்டியெடுத்து கொடுத்ததிற்காக முனாஸ்க்கு பதவியுயர்வுகளும், இலட்சக் கணக்கான பணமும் கொடுக்கப்பட்டது. மோகன் குழுவினருக்கும் 10 இலட்சம் ரூபா உத்தியோகப் பற்றற்ற ரீதியில் அரச பாதுகாப்புப் பிரிவால் வழங்கப்பட்டது. (ஆயினும் இப் பணம் இன்று கொழும்பில் குடித்தனம் நடத்தும் தமிழ் இயக்கங்கட்கு இலங்கையரசால் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தொகையைவிட மிகவும் குறைந்த தொகையே!) மோகன் குழுவினர் இன்னமும் முனாஸ் குழுவினருடன்தான் இருக்கின்றார்கள்.

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட இந்த மிலேச்சத்தனமான படுகொலைகளையும், கண்கள் தோண்டியெடுக்கும் காட்டுமிராண்டித்தனத்தையும் செய்தவர்கள் முனாஸ்–






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோகன் குழுவினர் என்பது சகல இயக்கங்களுக்கும், மட்டக் களப்பு மக்களுக்கும் தெரிந்த விடயம். மக்கள்தான் வாய் திறக்க முடியாத பாவப்பட்ட ஜென்மங்கள். ஆனால் இவர்கள்...?

தன் சொந்த மக்களின் கண்களையே தோண்டியெடுத்துத் தானம் கொடுக்கும் இந்த புத்த தர்மம் வேறெந்த நாட்டில்தான் இருக்கிறது இந்த சிறீலங்காவை விட்டால்?

தங்கள் கண்களும் தோண்டியெடுக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தினால் தமிழ்ப் பாராளுமன்ற நாற்காலிக்காரர்களும், இயக்கங்களும் பிரேமதாசாவிடம் நேரடியாக முழந்தாளிட்டு முறையிட்ட பின்னரே பிரேமதாசாவின் உத்தரவின்பேரில் கண்களைத் தோண்டியெடுத்தல் "கட்டுப்பாட்டுக்குள்" கொண்டுவரப்பட்டுள்ளது. இதைக்கூடப் புதிதாய் முளைத்த ஒரு தமிழ் மறவர் இயக்கம் மட்டக்களப்பில் நடந்த மர்மக் கொலைகளை ஜனாதிபதி நிறுத்திவிட்டாரென அறிக்கை விட்டு பாராட்டியது. அன்னதானம் கொடுக்காத குறைதான்!

புத்தர் வடக்கு, கிழக்கில் தமிழராய் பிறந்திருந்தால் நிச்சயமாய் அவரின் கண்களும் தோண்டப்பட்டிருக்கும். உலக மக்கள் பார்வை பெற உள்நாட்டில் தம் உயிர்களையும், கண்களையும் இழந்த அப்பாவித் தமிழர்களின் உடலைப் போலவே அவரது உடலையும் நாய் இழுத்துச் சென்றிருக்கும்.

– பி.உத்ரா (ஈழம்)

---

" இது நாங்க முந்திப் பாத்த படமெல்லே? அநியாயமாய் திரும்பியும் வந்திட்டம் "

" சீ அந்தப் படத்தின்ரை பேர் வேறை "

– இன்னான்னா





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வருவது வந்து தொலைக்கட்டும்

முக்கி முக்கி வார்த்தைகள் தேட
கவிதை என்ன
மலச்சிக்கல் சங்கதியா?

எழுதுவதை எழுதுங்கள்.
இயல்பாக வருவது
வந்து தொலைக்கட்டும்.
அது கவிதையாயிருந்தாலென்ன,
கழுதையாயிருந்தாலென்ன!

பூத கணங்களுக்கு
பூச்சூடும் நிலை வேண்டாம்.

எலும்புக்கூட்டுக்குள்
எதைத் திணித்தாலும்
உயிர் வருமா?

கழுதை ராஜநடைதான் போடட்டுமே.
அதன் மூக்கென்ன
கறுத்தா விடும்?

*
மைதிலி

www.tamilarangam.net




# பொலிஸ் நாஸிகள்

மன்ஹைம்` நகரின் சிறிய கிராமம் `ஹூனௌ`. இங்கு வாழ்பவர்கள் பெரும்பாலும் விவசாயிகள். தனித்தனி வீடுகளும், வளவுகளும் இவர்களுக்குள்ளன. செல்வந்தர்கள் உள்ள அதே நேரம் வேலையற்ற இளைஞர் தொகையும் கணிசமாயுள்ளது.

இவ் வருடம் மே மாதத்தில் இங்குள்ள கைவிடப்பட்ட கட்டிடம் ஒன்றிற்கு அகதிகள் கொண்டு வந்து தங்க வைக்கப்பட்டார்கள். இதுவே இக் கிராமத்தில் அகதிகளின் முதலாவது வருகையாகும்.

இது அங்கு ஏற்கெனவே செல்வாக்குப் பெற்றிருந்த புதிய நாஸிக் குழுக்களுக்கு உற்சாகமூட்டியது. அவர்கள் அக் கிராம மக்களைத் திரட்டிக் கொண்டுபோய், அந்த அகதி முகாமுக்குள் புகுந்து, அங்கிருந்த அநாதரவான அகதிகளை நையப்புடைத்தார்கள். குழந்தைகளை வீசி எறிந்து விளையாடினார்கள். தூஷண வார்த்தைகளால் அகதிகளை ஏசினார்கள். கைக் குழந்தைகளை பியரினால் குளிப்பாட்டினார்கள்.

ஆதரவற்ற அகதிகள் உதவி கோரிக் கதறியபோது யாரும் உதவிக்கு வரவில்லை. அக் கிராம மக்கள்தான் அங்கு நின்று அட்டகாசம் புரிந்து கொண்டிருந்தார்களே. அன்று முழுவதும் பொலிஸ் அப் பக்கம் வரவேயில்லை. அடுத்த நாள் வந்து முதல்நாள் நடந்த சம்பவம் பற்

www.tamilarangam.net

றிக் குறிப்பெடுத்ததுடன் தங்கள் கடமையை அவர்கள் முடித்துக் கொண்டார்கள்!

இக் காட்டுமிராண்டித்தன மான தாக்குதலை எதிர்த்து வெளிநகர "ஒட்டொனொமன்"* குழுவினர் ஆர்பாட்ட-கண்டன ஊர்வலம் ஒன்றை சூனென கிரா மத்தில் ஒழுங்கு செய்தனர். "ஸ்கின்ஸ்ஹெட்ஸ்" நிறவெறியர் கள் அப்பாவி அகதிகளைத் தாக் கும்போதும், அச் சம்பவத்தின் பின்பும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நகரசபையும், பொலிஸ் மேலிடமும் `ஒட்டோனொமன்`க ளின் ஊர்வலத்தை தடைசெய்தன. இதற்குத் தெரிவித்த காரணம் நாட்டின் அமைதி கெட்டுவிடு மாம்!

எனினும் தடையை மீறி குறிப் பிட்ட இடத்தில் கூடிய 400க்கும் மேற்பட்ட `ஒட்டோனொமன்`க ளால் கண்டன ஊர்வலம் திட்டமிட் டபடி ஆரம்பிக்கப்பட்டது. சிறிது நேரத்திலேயே அவ்விடத்திற்கு விரைந்து வந்த விசேட பொலிஸ் படை அவ்வூர்வலம் மேற்கொண்டு செல்லாமல் தடுத்தது. குதிரைக ளில் வந்த பொலிஸார் ஊர்வலத் தில் கலந்துகொண்டவர்களையும், அவ்விடத்தில் நின்ற பாதசாரிக ளையும் குறுந்தடிகளால் கண்மூடித் தனமாகத் தாக்கினர். பொலிஸா ரின் வேட்டைநாய்கள் கடித்துக் குதறுவதற்காக அவிழ்த்துவிடப் பட்டன.

100 `ஒட்டோனொமன்`கள் பொலிஸாரால் கைது செய்யப் பட்டு, இரத்தம் வழிந்தோடும் நிலையில் தெருத்தெருவாக இழு த்துச் செல்லப்பட்டனர். அடிகாய ங்களுடனும், வேட்டைநாய்களின் கடி காயங்களுடனும் இரத்தம் ஒழுகத் தப்பியோடிய சிலர் அரு கிலிருந்த `மன்ஹைமர் இளைஞர் மன்றத்திற்குள்` புகுந்து கொண் டார்கள்.

அன்று மாலை இளைஞர் மன் றக் கட்டிடத்தை சுற்றி வளைத்த பொலிஸ் பூட்டியிருந்த கதவை உடைத்துத் திறந்துகொண்டு, உள்ளே புகுந்து, அங்கே சிகி ச்சை பெற்றுக் கொண்டிருந்தவர் களையும், ஏனைய இளைஞர்க ளையும் கைது செய்து கொண்டு சென்றது,

இச் சம்பவத்தைக் கண்டித்து தொடர்ச்சியாக பல ஆர்பாட்ட ஊர்வலங்கள் அதே கிராமத்தில் நடாத்தப்பட்டன. ஜேர்மனியின் பல பாகங்களிலுமிருந்தும் ஏரான மானோர் இவ் வூர்வலங்களில் கலந்து கொண்டனர். இந்த ஊர் வலங்கள் அனைத்தும் தடை செய் யப்பட்டதுடன், பொலிஸாரின் தாக்குதல்களுக்குமுள்ளானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச் சம்பவங்களைப் பற்றி ஜேர்மனிய தொலைக்காட்சி சேவைகளோ, பத்திரிகைகளோ மூச்சே விடவில்லை.!

பொலிஸின் இப் பயங்கர வாதம் "ஸ்கின்ஹெட்ஸ்" நிறவெறியர்களுக்கு பலத்தைக் கொடுத்திருப்பதுடன், அகதிகளை அக் கிராமத்தைவிட்டே துரத்தியடிப்போம் என்று கொக்கரிக்கவும் வைத்திருக்கிறது.

மக்களின் வரிப்பணத்தில், பொலிஸ் உடையில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள நாஸிகள், பரவிவரும் நிற வெறித் தாக்குதல்களுக்கு அரசு தான் பொறுப்பாளி என்று மீண்டும் நிரூபித்துள்ளன.

(*: *இடதுசாரிகள், பாஸிஸ எதிர்ப்பாளர்கள், பங்ஸ் குழு, உதிரிகள்... என்று பலவகையானோரை உள்ளடக்கிய குழு 'ஒட்டொனொமன்' என்றழைக்கப்படுகிறது* )

– ரா.சி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அச்சம்



இப்போதெல்லாம்
முன்புபோல் நாம்
உடல் ஒரிடமும்
நினைவு ஒரிடமுமாக
நடப்பதில்லை.

ஓடிவரும்
காலடியோசை கேட்கும்போதும்
காற்றையுதைத்து
கிழித்து நடக்கும்போது
நிகழும் வளியின் உந்துதல்
உடலில் பட்டு விலகும்போதும்
குருதி நாளங்களூறைய
தன்னியல்பாகச் சுற்றிக்கொள்ளும்
விழிகள் !

மரணம்
எவ்வளவு வெறுப்பானது.

வாழ்வுக் கனவு சுமந்து
ஐரோப்பியத் தெருவெங்கும்
இருப்பிற்காக
அலைகையில்
மனித மறுப்பிற்கான சூறாவளி
பிடரியை முட்டி
உயிரைக் கேட்குமா?

*
ஸ்ரீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தற்கொலையாளிகள்

*( கலம் 52 இன் தொடர்ச்சி )*

போராளிகளல்லாத வேறு 3 பெண்கள் இந் நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றனர். ஒரு பெண், போராட்டத்தில் உயிர்நீத்த தனது புதல்வனைப் பற்றி பெருமையாகப் பேசுகிறாள். மீண்டும் இங்கே அழுத்தம் வீரப் புதல்வருக்கே அளிக்கப்படுகின்றது. புதல்வியருக்கும், புதல்வியரின் அன்னையருக்கும் அளிக்கப்படும் அந்தஸ்து என்ன என்ற வினா இவ்விடத்தில் எழுவது தவிர்க்கவியலாதது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண் போராளியின் மரணச் சடங்கில் சோகம் தாங்காது அழுகின்ற அவளது தந்தையை அழாதே என அதட்டும் ஒரு பெண். மிகச் செயற்கையான இந்தக் காட்சி பெண்களது "மனவலிமையைக்" காட்டுவதாகக் கருதி அமைக்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு பெண் திருநீறு பூசி, சந்தனக் குங்குமப் பொட்டிட்டு, பட்டுச் சேலை கட்டி சைவ தமிழ்ப் பெண்களின் குறியீடு போலத் தோன்றி இலங்கை அரசின் அநீதி பற்றியும், புலிகளின் போராட்டத்திற்கு மக்கள் அளிக்கின்ற ஆதரவு பற்றியும் பேசுகிறார்.

இந்த 3 பெண்களும் வயது முதிர்ந்த பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வயது முதிர்ந்த பெண்கள் தமிழ்க் கலாச்சாரத்தில் அன்னை ஸ்தானத்தை அடைந்தவர்கள். அவ்வகையில் பழைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வீரத் தாய்" பிம்பமே இங்கு மறு அமைப்பு பெறுகின்றது. தாய் என்ற பாத்திரத்தைப் பயன்படுத்துவது சில சமயம் தவிர்க்க முடியாததாகப் போனபோதும் ( அன்னையர் முன்னணி அமைப்புகள் 84இல் வடக்கிலும், 91இல் தெற்கிலும் தோன்றிய பின்னணியை இங்கு கவனிக்கலாம் ) பெண்களுடைய விடுதலை, முன்னேற்றம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அது அவர்களது எல்லைகளைக் குறுக்குவதாகவே அமையும். சமூகத் தாய்மை அல்லது இயற்கைத் தாய்மை எதுவாகினும் அதற்குச் சில குறிப்பிட்ட குணாம்சங்கள் அளிக்கப்படுகின்றன. தன்னலமின்மை, தியாகம், பாதுகாப்பு அளித்தல் போன்ற இந்தக் குணாம்சங்கள் பெண்களது மரபு ரீதியான ஸ்தானத்தையே மீண்டும் உறுதிப்படுத்துவனவாக அமைந்து விடும். எனவே புலிகள் அளிக்கின்ற "தாய்" படிமம் பற்றி நாம் அக்கறை கொள்ளுதல் வேண்டும்.

இவ் வீடியோ நிகழ்ச்சியில் பிரச்சினையைக் கிளப்புகிற இன்னோர் காட்சி திருமதி அடேல் பாலசிங்கம் தோன்றுவதாகும். பெண்களின் சமத்துவ நிலை பற்றிய வசனம் ஒரு வெளிநாட்டு வெள்ளைக்காரப் பெண்ணின் (இந்த மொழிக் கையாளுகையை சர்வதேசப் பெண்நிலைச் சகோதரிகள் மன்னிப்பார்களாக!) வாக்கு மூலமாகவே இடம்பெறுவது ஏன்? அடேலை ஒரு பெண் போராளி பெண்களின் முகாம் ஒன்றுக்கு கூட்டி வருகின்றார். இருவரும் அருகருகாக நிற்கின்றனர். எனினும் அடேலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆனால் பல் கலைக்கழக விரிவுரையாளராகப் பணிபுரிந்த, பேச்சாற்றல் உள்ள ஜெயா அடிக்கடி தோன்றியபோதும் பெரும்பாலும் வாய் திறவாமல் இருக்க வெளிநாட்டுப் பெண்ணாகிய அடேல் கதைப்பது ஏன்? புலிகளினுடைய முக்கியமான கருத்துக்களைத் தெரிவிப்பவர்களாக பிரபாகரன், யோகி, மாத்தையா, பாலசிங்கம் ஆகிய ஆண்களுடன் சமத்துவமாக இந் நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவிப்பது பெண்களுள் அடேல் மட்டுந்தான்!

அவளை ஆண் தலைவர்களின் அந்தஸ்த்திற்கு உயர்த்தியதற்கு அவரது நிறம், இனம் காரணமாகினவா என்பது சுவையான வினாவாகும். ஏகாதிபத்தியத்தின் சின்னம் என்று யாழ் டச்சுக் கோட்டையைத் தகர்க்க முனைந்த புலிகளது உளவியல் அவர்களை அறியாமலே Colonized ஆக இருப்பதை இது காட்டுகிறதா? அல்லது கணவனாகிய பாலசிங்கத்தினுடைய அந்தஸ்து மனைவியானதால் அடேலுக்கு அளிக்கப்பட்டதா?

www.tamilarangam.net

ஆயுதம் தாங்கிய இயக்க அங்கத்தவர்களை "பெடியங்கள்" என்றே யாழ்ப்பாண மொழிவழக்கு குறிப்பிட்டு வந்துள்ளது. கணிசமான அளவு பெண்கள் இயக்கத்தில் சேர்ந்த பின்பும், பஜீரோ ஜீப்புகளைச் செலுத்துவதும், சைக்கிளில் வலம் வருவதும், கால்நடையாக ரோந்து செல்வதும் சாதாரணமான அன்றாட காட்சியாகிவிட்டபோதும் "பெடியங்கள்" என்ற மொழி வழக்கு மாறவில்லை. அவ்வகையில் போராட்டமும், இயக்கமும் ஆண்மைப்படுத்தப்பட்டதாகவே யாழ்ப்பாணத்து பொதுசன உளவியலிலும், கருத்து நிலையிலும் மொழி வழக்கிலும் உருவாகியுள்ளது.

இயக்கத்திற்குள் முக்கியமான பணிகளை ஆற்றியிருந்தும், உயிரைப் பலி கொடுத்திருந்தும் பெண்களினுடைய பங்கும், ஆற்றலும் போதியளவு முக்கியப்படுத்தப்படவில்லை என்பது மாத்திரமல்ல, புலிகளின் நினைவாற்றலும், உளவியலும், கருத்து நிலையும் ஆண்நிலைப்பட்டதாகவே உள்ளது. பெண்களையும் "பெடியங்க"ளாகவே காண்கின்ற, காட்சிப்படுத்துகின்ற நிலை அது. "தற்கொலைக் கொலையாளிகள்" வீடியோப்படம் இதனைத் துல்லியமாகவே படம் பிடித்துள்ளது.

– சசி. பௌலேமி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வித்தியார்த்தி



அப்கானில்தான் நிலமைக ளைக் கேள்விப்பட்டதிலிருந்து வித்தியார்த்திக்கு இருப்புக் கொள்ளவில்லை. தொடர்ச்சியாக ஆப்கான் தகவல்களைத் தொகு த்து வைத்துப் பார்த்தான். தாச் சிக்குள்ளிருந்து நெருப்புக்குள் விழுந்த கதைதான் என்று வித்தி யார்த்திக்குத் தெரிந்தது.

ரசிய ஆதரவு நஜிபுல்லா அர சைக் கலைத்தபின், அதிகாரத் தைக் கைப்பற்றிய முஸ்லீம் தீவிர வாதக்குழு முதலில் கவனித்தது பெண்களைத்தான். பெண்கள் வேலைக்குப் போகக்கூடாது, தொலைக்காட்சியில் தோன்றக் கூடாது, வீதிகளில் அநாவசிய மாக நடமாடக் கூடாது, உடைகள் உடம்பு முழுவதையும் மூட வேண் டும்... என்று பல ஆணைகளை புதிய அதிகாரிகள் விதித்திருந் தனர்.

அமெரிக்க, பாகிஸ்தானிய ஆதரவுடன் போரிலீடுபட்டு அர சைப் பிடித்த முஸ்லீம் தீவிரவா தக்குழுவின் போக்கு வேறெப்படி இருக்கும் என்று வித்தியார்த்தி கேட்டுப் பார்த்தான். நஜிபுல்லா விடமிருந்து சுதந்திரம் கோரி

www.tamilarangam.net

பெண்களின் சுதந்திரத்தைப் பறித்துக்கொண்ட புதிய ஆப்கான் அரசை நினைக்கும்போது ஈழவிடுதலை இயக்கங்களின் ஞாபகம் வருவதை வித்தியார்த்தியால் தவிர்க்கமுடியாமல் போயிற்று.

பெண்கள் விடயத்தில் மட்டுமல்லாது, பல்வேறு குழுக்கள் நீயா? நானா? என்று தமக்குள் மோதிக் கொள்வதும், ஏகாதிபத்தியங்களினது உதவிபெற அடிபடுவதும், தங்கள் அதிகார மோதலுக்காக மக்களைத் தொடர்ந்து பந்தாடுவதும் ஆப்கான் நிலமையை ஈழத்துடன் ஒப்பிட வைத்தன. இந்த ஒப்பீடுகள் மூலம் வித்தியார்த்தி தாச்சியையும், நெருப்பையும் குறித்த எச்சரிக்கையைப் பெறுகிறான்.




அது ஏன் இளையராஜா மேல் எல்லோருக்கும் இவ்வளவு ஆத்திரம் என்று வித்தியார்த்தி யோசித்துப் பார்த்தான். எங்கு பார்த்தாலும் எல்லோரும் இளையராஜாவின் பாடல்களைத்தான் விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கோடம்பாக்கத்திலிருந்து வருகின்ற படங்களில் பெரும்பாலானவைக்கு இசை இளையராஜாவேதான். பாடல் கசற்றுகள் ஒருபுறமிருக்க, இளையராஜாவின் வாத்திய இசை கசற்றுகளும், ஸி.டி.க்களும் அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

'திக்கெட்டும் நிகழும்' செய்திகளைத் திரட்டித் தீஞ்சுவையுடன் தரும் ' வீரகேசரியில் இளையராஜா குறித்து திறந்த விவாதமே நடாத்தப்பட்டு வருகிறது!

தன்னிடம் உதவியாளராக இருந்த இளையராஜா தான் சேகரித்து வைத்திருந்த நாட்டுப் பாடல்களைத் திருடிக்கொண்டு போய்த்தான் 'அன்னக்கிளி' படத்திற்கு இசையமைத்தார் என்று எம்.ஜி.ஆர். அமைச்சரவையின் நர்த்தனநாயகி பத்மா சுப்பிரமணியம் என்பதுகளில் 'இதயம் பேசுகிறது' சஞ்சிகையில் குற்றம் சாட்டியிருந்தார்.

தென்னமெரிக்க, கிழக்கைரோப்பிய நாடுகளின் கிராமப்புற மக்கள் இசையைக் கொப்பியடித்துத்தான் இளையராஜா பிரபல்ய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மடைகிறார் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை இரண்டு 'அசலும், நகலும்' என்ற நிகழ்ச்சியில் 'ஆயிரம் மலர்களே மலருங்கள்..' போன்ற பாடல்களைப் போட்டுக் காட்டி நிரூபித்தது.

மேற்கத்தைய இசையை தழுவித்தான் இசைபோடுகிறார் இளையராஜா என்று வேறுசில இசையமைப்பாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். உதாரணத்திற்கு 'ப்ரியா' படத்தில் இடம்பெற்ற 'டார்லிங் டார்லிங்...'என்ற பாட்டு BoneyM இன் 'Sunny Sunny...' என்ற பாடலின் அப்பட்டமான கொப்பி என்கிறார்கள்.

இத்தனையையும் மீறி இளையராஜா கொடி கட்டிப் பறப்பதைத் தான் வித்தியார்த்தியால் காண முடிந்தது. புதுக்கவிதைகளின் தந்தை தானே என்று மார்தட்டிக் கொண்ட மு.மேத்தாவால் "தமிழ் இளைஞர்களின் உதடுகளில் உட்கார்ந்திருந்த ஹிந்திப்பாட்டு நாற்காலியை இறக்கிவைத்து அங்கே தமிழ்ப்பாடல்களுக்குச் சிம்மாசனம் போட்டவர்" என்று புகழப்படும் இளையராஜாவின் மேல் பலருக்கு ஆத்திரம் தருகின்ற விடயமாக வித்தியார்த்தியால் பார்க்க முடிந்தது ஒன்றைத் தான். அது இளையராஜாவின் திமிர். தன்னைவிட்டால் ஆளில்லை என்றடிக்கும் கொட்டம். தன்னைத்தானே ராஜா, ராஜா என்று புகழுந்துகொள்ளுதல்.

சரியான மாற்று ஒன்று இல்லாத பட்சத்தில் இருக்கின்ற ஒன்று தலைகால் புரியாமல் குதிப்பதும், தன்னிச்சையாக நடப்பதும், ஏனையவர்களை அடித்து வீழ்த்துவதும் இசையுலகில் மட்டுமல்ல, அரசியலிலும் நடந்து கொண்டுதானிருக்கிறது என்பதைத்தான் வித்தியார்த்தி சொல்லிக் கொள்ள விரும்புகிறான்.

சரியான மாற்றை அமைக்காமல் திட்டிக் கொண்டிருப்பதால் என்னதான் நடந்துவிடும் என்று வித்தியார்த்திக்குப் புரியவேயில்லை.

இதேநேரம் வித்தியார்த்தியிடம் இன்னொரு கேள்வியும் பிறந்தது. கவர்ச்சியில் மயக்கி வைத்திருக்கும் சினிமா இசையில் மூழ்கியிருப்பவர்கள் தமிழகத்திலிருந்து நாட்டுப்பாடல்களுக்கு கே.ஏ.குணசேகரனும், ஈழத்தில் புதுக்கவிதைகளுக்கு தேசிய கலை,இலக்கியப் பேரவையும் உயிர் கொடுத்திருப்பதை எவ்வளவு தூரம் அறிந்துகொண்டுள்ளார்கள்? இப்படியானவர்களுக்கு எப்படி உதவார்கள்? என்பதே அது.

www.tamilarangam.net

சுவிஸிலிருந்து தமிழ் அகதிக ளைத் திருப்பியனுப்புகிறார்கள், டென்மார்க்கிலிருந்தும் அனுப்பப் போகிறார்கள், இங்கும் விரை வில் இது நடக்கும் என்று பலர் கலவரப்பட்டுக் கதைப்பதையிட்டு வித்தியார்த்தி பெரிதாக அலட் டிக் கொள்ளவில்லை. இது ஒரு சீஸன் பயம் என்று வித்தியார்த் திக்குத் தெரியும்.

அனுப்பப் போகிறார்கள் என்று கதை அடிபடத் தொடங் கும்போதுதான் சிலருக்கு உண் மையான பயம் வரும். நாட்டில் பயங்கர அழிவு நடக்கிறது என்ற பிரக்ஞை வரும். அங்கே போய் என்ன செய்வது என்ற கவலை வரும்.

ஐரோப்பிய அரசுகளும் வருட த்திற்கு இரண்டு மூன்று தடவை கள் அகதிகளை வெருட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் இதைச் சீரியஸான பிரச்சினையாகப் பலர் கருத்தில் எடுக்காததை வித்தியார்த்தி அறி வான். "உவங்கள் உப்பிடித்தான் நெடுக வெருட்டுவாங்கள்" என்று அறிவுபூர்வமாகவும், "உதை எதி ர்த்து ஊர்வலமோ? உங்களுக்கு வேறை வேலையே இல்லையே?" என்று உணர்வுபூர்வமாகவும் கதைப்பவர்களை பல வருடங்க ளாக வித்தியார்த்தி சந்தித்துக் கொண்டுதான் வருகிறான்.


எந்த ஒரு பொது நடவடிக் கைகளிலும் ஈடுபடாமல் எல்லாம் தங்களுக்குச் சாதகமாகவே நடக் கும் என்று நம்பிக் கொண்டிருப் பவர்களைப் பார்த்து வித்தியா ர்த்தி ஆச்சரியப்படுவதுண்டு.

நாஸிகளை எதிர்த்து ஊர்வ லம் வைத்தால் அதில் தமிழர்க ளைக் காணமுடியாது. 88இற்குப் பிறகு வந்த தமிழர்களைத் திருப் பியனுப்பப் போவதை எதிர்த்து ஊர்வலம் வைத்தால் அதற்கு முதல் வந்த தமிழர்களை அதில் காணமுடியாது. துருக்கியருக்கு நாஸிகள் கத்தியால் குத்தியதைக் கண்டித்து துண்டுப்பிரசுரம் விநி யோகிப்பதற்குத் தமிழர்களைப் பிடிக்க முடியாது. தங்களுக்குப் பிரச்சினை என்று வரும்போது மட்டும் 'குறூண்பாட்டி, சேர்ச், லோயர், குருவிக்காரரர்..' என்று பதறியடித்துக்கொண்டு திரிவார் கள்.

குர்திஸ் அகதிகளைப் போல வோ, யூகோஸ்லாவிய அகதிக ளைப் போலவோ தங்களுக்கென் றொரு பொதுநல ஸ்தாபனத்தை உருவாக்க தமிழ் அகதிகளால் ஏன் முடியவில்லை என்று வித்தி யார்த்தியால் கண்டுபிடிக்க முடிய வில்லை. நகருக்கு நகர் கோவில் கட்டுவதுபோல், விளையாட்டுக் கழகம் அமைப்பதுபோல், அகதி கள் இங்கு முகங்கொடுக்கும் பிர

www.tamilarangam.net

ச்சினைகளைச் தீர்க்கக்கூடிய ஒரு அமைப்பை உருவாக்கும் முயற்சி தமிழ் அன்பர்களால் எப்போது முன்னெடுக்கப்படும் என்று வித்தியார்த்தி பார்த்துக்கொண்டிருக்கிறான்.



சோமாலியாவில் இலட்சக் கணக்கானவர்கள் பட்டினியால் சாகப் போகிறார்கள் என்ற அறிவித்தலைப் பார்த்து பார்த்து வித்தியார்த்திக்கு அலுத்துப் போய் விட்டது. தொலைக்காட்சியில் பல விசேட நிகழ்ச்சிகள் போட்டுக் காட்டினார்கள். பத்திரிகைகளில் எல்லாம் பெரிய விளம்பரங்கள் வெளிவந்தன. ஐ.நா.வின் விமானங்கள் உதவிப் பொருட்கள் கொண்டு போவதாக பெரிதாகச் சொல்லிக் கொண்டார்கள்.


இவ்வளவு நடந்தும் பட்டினியும், சாவும் குறையவேயில்லை. எதிர்பார்த்த எண்ணிக்கையைவிட மோசமாகிக்கொண்டே இருந்தது. அப்படியானால் விளம்பரத்தில் காணப்படுகின்ற உதவிகள் எல்லாம் எங்கே போய்ச் சேருகின்றன என்பது வித்தியார்த்தியின் கேள்வி.

பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் வேண்டுகோள் விடுத்து அன்பளிப்புகள் சேகரிக்க வேண்டிய நிலையில் மேற்குநாட்டு அரசுகளோ, நிறுவனங்களோ இல்லை என்பது வித்தியார்த்திக்கு மட்டும் தெரிந்த விடயமில்லை. ஈராக்குடன் சண்டை பிடிப்பதற்கு மில்லியன் கணக்கில் பணத்தை வாரி இறைத்தவர்கள் சோமாலியாவில் பட்டினிச் சாவுக்கு ஐந்தாறு விமானங்களில் மாப்பொதிகளை அனுப்பும் யோக்கியதையை எல்லோரும் கண்டு கொள்ள வேண்டும் என்கிறான் வித்தியார்த்தி.

ஐரோப்பியச் சந்தையில் பொருட்கள் கூடியவுடன் விலை சரிந்துவிடலாம் என்ற பயத்தில் கடலுக்குள் தொன் கணக்கில் கொட்டி அழிப்பவர்கள் சோமாலியாவில் பட்டினியென்றால் என்ன செய்துவிடப் போகிறார்கள்? இந்த அரசு ஆதரவு நிறுவனங்களின் உதவிகள் எத்தனைபேரின் பசியைத் தீர்க்கும்?

www.tamilarangam.net

நிலமை இப்படியிருக்க, சோமாலியாவுக்கு அமெரிக்கா இரகசியமாக ஆயுதங்கள் விற்பனை செய்துகொண்டிருப்பதை சஞ்சிகையொன்று ஆதாரத்துடன் நிரூபித்துள்ளது. இந்த அரசுகள் பிள்ளையின் கழுத்தைத் திருகி விட்டு, கிலுகிலுப்பையை ஆட்டிக் கொண்டிருக்கின்றன என்றுதான் வித்தியார்த்தி சொல்லுவான்.



இலங்கையில் ஆங்காங்கே அவ்வப்போது வெளிவரும் வெளியீடுகள் எத்தனை பேருக்குக் கிடைக்கின்றன என்று வித்தியார்த்திக்குத் தெரியவில்லை. தனக்குப் பிடித்த கவிதையொன்றை வித்தியார்த்தி தருகிறான். 'பாட்டாளிக்குப் பரிசு' என்ற கவிதைத் தொகுப்பில் முத்துசம்பந்தர் எழுதிய 'நியாயம்' என்ற கவிதை.

ஆண்டவன் சந்நிதானத்தில்
ஆயிரத்தெட்டு ரூபா அர்ச்சனை
ஆராத்தி முடிந்துவிட்டது
அகன்றார் பக்தர் அவ்விடம்.

பச்சைப் பாலகனொருவன்
பசியினால் வாடி நொந்து
பக்தரின் பக்கம் சென்று
பரிவுடன் நின்றான் கையை ஏந்தி.

"பிச்சைக்காரச் சனியன்கள்
பரமன் பூஜை பஜனையிலும்
பணம் என்ன சும்மாவா வருகிறது"
பக்தரின் பக்க நியாயம்.

ஆயிரத்தெட்டு ரூபாவை
அநியாயமாக்கிய அழுக்கன்
அரைக்காசு பிச்சைபோட
அற்ப நியாயத்தைத் தேடுகிறானே!

தொகுப்பு: இரா. செல்வத்துரை

www.tamilarangam.net

# சூரியப் பூச்சிகள்

கண் விழித்தேனா...?
ஈதோர் காலைப் பகலென
கண்களைச் சுட்ட
கதிரவன் பகர்ந்தான்.

காலையொலிகளும்
கடலின் இரைச்சலும்
காதினுள் உரசின.

எங்கே இருக்கிறேன்?
எப்படி வந்தேன்?
எங்ஙனம் பிழைத்தேன்?
எத்தனை யிரவுகள்
மயக்கமுற் றிருந்தேன்?

எதுவுமே தெளிவற்று
என்னுட் குழம்பி,
தேடினேன் விடைகளை.

கிடுகுத் தட்டியால்
மானம் மறைத்த
குடிசைத் திண்ணையிற்
கிடத்தப்பட் டிருந்தேன்.

மூலைகள் சிலிர்த்த
பன்புற் பாயென்
கசிவுற்றுச் சோர்ந்த
உடலைத் தாங்கி
நசிவுற்றுக் கிடக்க,
தென்னையைத் தடவி
வருங்கடற் காற்று
சோர்ந்த என் னுடலை
சுகம்படைத் தேக
மீனின் வாடையென்
மூச்சினைத் தொடுதோ?

வலைகள் காயும்
கயிற்றுக் கொடியிலென்
உடைகள் தொங்கிச்
சிறகை அசைத்தன.

எங்கே யிருக்கிறேன்?
எப்படி வந்தேன்?
எங்ஙனம் பிழைத்தேன்?
விடைதெரி யாது
என்னுட் குழம்பினேன்.

வறுமை கவிந்த
வயதான தாயாள்
வாரியென் தலையைத்
தன்மடி கிடத்தி
வாஞ்சையோ டெந்தன்
கலைந்தகே சந்தனை
வருடிக் கொடுத்தாள்.

எங்கே யிருக்கிறாய்
என்பதை விரிவாய்ப்
பின்னர் பேசுவோம்.

எனது நிலையைப்
புரிந்தாளோ தாயாள்
அன்புடை வாக்குடன்
அளித்தாள் குவளையிற்
குறுநாட் கஞ்சி.
அழுதன எனது
விழிகள் இரண்டும்
அர்த்தங்கள் பொதிந்த
உணர்ச்சிப் பெருக்கில்.

www.tamilarangam.net

சீச்சீ யிதென்ன...?
சின்னக் குழந்தைபோல்
வெதும்புவதென்ன?
முதலிற் பசிதீர்
முடிவிற் பேசுவோம் - உன்
தாயென் றென்னை
எண்ணுதல் தவறோ?

முந்தானை கொண்டென்
விழிவழி நீரைத்
துடைத்தன எம்மை.
பொருமிக் கிடந்த
பாசத்தின் பெருங்கடல்
இமைமடை வெடித்து
இரு கன்னம் வழியே
மலைவிடு நீர்போல்
உரக்கச் சொரிந்தது.

மகனே.. மகனே..
அழுவதை விடுவாய்.
தாங்கே னுனது
கலக்க மினியும்.

கன்னங்கள் வருடினாள்.
உச்சியை முகர்ந்தாள்.
எப்படி தணிப்பேன்
கண்வழி ஊற்றை?

பேசத் துடித்தன
உதடுக ளிரண்டும்
நாவி னீரம்
வரண்டு போனதால்
வார்த்தைக ளெதுவும்
அகப்பட வில்லை.

பலவீனங் கண்ட
கைகள், கால்கள்
நடுக்கமுற்றுச்
சோர்ந்து போயின.

குவளையுள் மிதந்த
சோற்றுப் பருக்கையை
கையா லள்ளி
ஊட்டின எம்மை.

வரண்டு கிடந்த
நாவினை நனைத்து
மிதந்து சென்றன
சின்னப் பருக்கைகள்.

எங்கே யிருக்கிறேன்?
எப்படி வந்தேன்?
எங்ஙனம் பிழைத்தேன்?
விடைகளை யெண்ணி
ஏக்கமுற் றிருந்தேன்.

குவளைக் கஞ்சியிற்
பாதிக்கு மேலே
தொண்டைக் குழியுட்
செல்ல மறுத்தன.

உடைந்து போன
பாதிச் சவளில்
அலைக ளிடையே
அடைந்து வந்தாய்
பாதி உயிரோடு.

சாமக் கடலின்
வழிவலைத் தோணியில்
தாங்கி வந்தான்
எனது கணவன்.

நேற்றைய இரவில்
ஏதோ அனர்த்தம்
நிகழ்ந்தது உனக்கு
அலையிடை மகனே.
சில்லிட்ட உன்னுடல்
பிரேதமாய்க் கிடந்தது.
விடிய விடிய
வெப்பங் காட்டினோம்.
விழிகள் திறந்தது
இப்போதான் கண்ணே.
தேவன் போட்ட
பிச்சை மகனே
உன்னுட லுள்ளே
வாழும் உயிரது.

மெல்லிய தென்பு
என்னுட் பரவ
மேனி நிமிர்த்த
முயற்சி கொண்டேன்.
மெல்ல மகனே
என்ற படிக்கு
திண்ணைச் சுவரோடு
சாய வைத்தாள்.

அறிமுகமில்லாத்
துணியொன் றெனது
இடையோ டுறவாய்
இருக்கக் கண்டேன்.

வலைக்கொடி மீதென்
உடைகள் கிடந்து
சிறகை யசைத்து
மகிழ்ச்சி கூறின.
வேலி யிடுக்கால்
நுரைகள் பொரும
இரையுங் கடலின்
மேனி தெரிந்தது.

www.tamilarangam.net

வாழ்வைச் சுமக்குமிந்த
உன்னத மனிதரின்
மலைபோ லுயர்ந்ததுயர்
உள்ளத்தைச் சுட்டது.

குவளை மடியில்
எஞ்சிய கஞ்சியை
இதையும் பருகெனக்
கையிற் திணித்தாள்.

கடைவரைபோயுன் மதியப்பசிக்கு
சோறுபோடப் பார்த்துவாறேன்
திண்ணையில் வீசும் காற்றிற் சிறிது
களைப்பைப்போக்கு விரைவில் வருவேன்.

அகன்றன எம்மை கடுகதிபோலே
படலை நீங்கி முதுமைக் கொவ்வா.

( தொடரும்)

*

தமயந்தி



www.tamilarangam.net

# நடராஜனின் குறிப்புகள் பற்றி..

*( கலம் 52 இன் தொடர்ச்சி )*

ஒரு குறிப்பிட்ட சிந்தனைப் போக்கு உருவாக அக் குறிப்பிட்ட வர்க்கம் **அங்கே** இருக்க வேண்டும் என்பது முக்கியமல்ல ... என்று நாம் குறிப்பிட்டது வடக்கு, கிழக்கில் முதலாளிய தேசியவாதச் சிந்தனை தோன்ற நியாயமில்லை என்ற 'சமர்' இன் வியாதத்திற்குப் பதிலளிக்கையிலேயே. வரட்டுப் பொருள்முதல்வாதந்தான் அனைத்துச் சிந்தனைகளுக்கும் பொருளுக்கும் இடையில் நேரடியான உறவை எதிர்பார்க்கிறது. இந்த உலகில் தேசிய முதலாளி வர்க்கம் என்று ஒரு வர்க்கம் தோன்றியே இருக்காவிட்டாலும் தேசிய முதலாளிய சிந்தனை தோன்றியிருக்கும் என்று நாம் சொன்னதாக 'உயிர்ப்பு' கருதுகிறதோ என்னவோ அது இப்படி எழுதியிருக்கிறது. வடக்கு, கிழக்கிலல்ல, உலகின் எந்த மூலையிலும் இன்று ஒரு சிந்தனை தோன்றுவதற்கு நேரடியான 'பொருள்மூலம்' அவசியமில்லாதபடிக்கு உலகம் விஞ்ஞானத்தால் மிகவும் சுருங்கிப் போய்விட்டது. எல்லாவிதமான சிந்தனைகளும் எல்லாவிடமும் இன்று பரவுகிறது. ஒரு சித்தாந்தம் ஒரு இடத்தில் பரவ, வளர அந்த இடத்திலேயேதான் அது உருவாக வேண்டும் என்று எந்த நியதியும் இல்லை. அது பிற இடங்களிலிருந்தும் தொற்றிக்கொள்ள முடியும்; தொற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றிக் கொள்கிறது. இந்தச் சாதாரண உண்மையைத்தான் நாம் எழுதினோம். 'உயிர்ப்பு' இதை பெரிய 'தத்துவப் பிரச்சினையாக' எடுத்துக் கொண்டுள்ளது. நடராஜனது பிரச்சினையிலும் வெளிப்படுகிற கேள்வி அதுவே. உண்மையில் இவை எந்தக் குழப்பமுமில்லாமல் புரிந்துகொள்ளக் கூடியவைகளே.

பாட்டாளிவர்க்கச் சிந்தனையையோ, வடக்கு, கிழக்கு கூலி விவசாயிகளையோ கொச்சைப்படுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை. மாறாக நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம்தான் இருக்கிறது.

சரியாகப் புரிந்துகொள்ளப்படாத, எமது அகநிலையான விருப்பங்களுக்கு இசைவாக எடுக்கும் முடிவுகள் யாருக்கும் பயன் தரப் போவதில்லை.

ஏனென்றால் அவை வரலாற்றின் வேகத்தில் அள்ளி வீசப்பட்டு விடும்.

வரலாறு எப்போதும் உண்மையான நிகழ்வுகளின் ஊடாகவே நகர்கிறது.

ஊகங்களாலோ, விருப்பங்களாலோ அதை நகர்த்திவிட முடியாது.

- பிரஜைகள் (ஈழம்)

---



" எனது அமைச்சரவையில் கொலைகாரர்களும், கொள்ளைக் காரர்களும்தான் அமைச்சர்களாக இருக்கிறார்கள் என்ற வதந்தியை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் "

*- இன்னன்னா*

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

## சித்தம் கலங்கிய முத்தர் கூட்டம்!

ஈழமின்றி வாழ்வில்லையென
வாழ்வைப் பறிக்கும் ஈழப்போரின்
அழிவுகண்டும் தயங்கா நிலையில்
மூன்றாம் பாதை காணவிழையும்
சித்தம் கலங்கிய முத்தர் கூட்டம்
முரசு கொட்டும் எக்காளமிடும்.

போகும்பாதை காட்டு முன்னர்
வந்த பாதை மறந்து போயின்
புதிய பாதை தேடலெல்லாம்
குண்டுச் சட்டி குதிரையோட்டம்
சுத்தி சுத்திச் சுப்பன் கொல்லை
சுருதியின்றி அழிந்தே போகும்.

மூன்றாம் பாதை கட்டவிழ்ந்து
சுக்குநூறாய் போன கதையும்
நூறாய்ப்போன நிகழ்வுதனையும்
பாழாய்ப் போன நியதியென்று
பகன்றதனை புறமே தள்ளி
பதிவிரதை வேசம் போடும்.

நாமே சகலதும், நாமே புரட்சி
முடியபாதையின் திறவுகோல் நாமே
மற்றையோரெல்லாம் பேடிக் கூட்டம்
எழுத்துத் திறமை எமக்கேயுண்டு
அரசியற்சொற்களின் முதுசம் நாமே.

அஸ்வியும், வீசியும் அழகுடனெழுதி
உள்ளும் புறமும் முரண்பட்டு நின்று
புகுந்துவிளையாடி புரட்சி செய்வோர்
கானல் நீரினில் தாகம் தணிக்க
பாதை காட்டும் மூடரன்றோ!

உண்மைத் தேடல் உளமுடன்வேண்டின்
வன்ம அரசியலின் விதைநிலமதனின்
விழுமியமனைத்தும் மறுக்கும்நோக்கில்
மானிட உயிரின் மகத்துவமறிந்தும்
களைக்கிடமுடியா ஆற்றலுமாய்ந்தும்– அதை
தடுப்பெனவிருக்கும் சகலதுமடையும்
நோக்குநிலையில் தேடுதல் வேண்டும்!
நோக்குநிலையில் தேடுதல் வேண்டும்!

துரோகி, தியாகி அகராதி மாறி
ஈழம், தேசம் முகத்திரை கிழித்து
மக்கள் மானுடம் மதிப்பினைப் பெற்று
சாதல், போதல் சகலதும் விளக்கி
வாழ்தல் நிலைத்தல் வளமுடன் நோக்கி
வீழ்த்தல் கொடுமை எழுதல் உயர்நெறி
வேதம் இவையாய்க் கொள்வோமாயின்
தேடலில் இணையக் கூடுவர் பலரும்.
தேடலில் இணையக் கூடுவர் பலரும்.

– .......ன் (ஈழம்)

www.tamilarangam.net

## அறைதான் கிடைத்தது!

உங்கள் 'இரவல் தூண்டில்' போல நானும் ஒர் இரவல் வாசகன்தான். என்ன செய்ய!சஞ்சிகைகளை நண்பர்களிடம் இரவலாகப் பெற்று வீட்டுக்குக் கொண்டு செல்லும் வழியில் செக் பொயின்றில் அகப்பட்டு அறை வாங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. அவற்றையெல்லாம் எழுத இச் சிறு மடல் போதாது.

தமிழர்களிலும் இப்படி நடுநிலமையாக எழுதக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பது என்னைப் போன்ற ஒரு சிலருக்குத் தான் தெரியும். புலிகளின் நிஜத்தைக் கண்ணுக்கு முன்னால் காணும் எங்களால் இப்படியான நடுநிலமை வெளியீடுகளைக் கண்டு ஆச்சரியப்படாமலிருக்க முடியாது.

உங்கள் வெளியீடுகளை சேமித்துப் பத்திரப்படுத்த விரும்புகிறேன். சந்தா செலுத்தி வாங்கும் அளவுக்கு நான் 'உள்ளவன்' அல்லன். முடியுமானால் பழைய, புதிய பிரதிகளை அனுப்புங்கள்.

-......ஸ்(ஈழம்)

## உப்புச் சப்பில்லாத அறுவை!

தூண்டில் தன்னை அரசியல் கருத்துகளின் விவாதக்களமாய் காட்டுகிறதே தவிர, தனது அரசியல் நிலைப்பாட்டை திட்டவட்டமாக இன்னதென்று தெளிவுபடுத்தவில்லை. அரசியல் சஞ்சிகை ஒன்று வெறுமனே விவாதக்களமாக மாத்திரம் இருந்துவிட முடியாது. அதற்கென்று ஒரு இலக்கு, அதற்கான திட்டவட்டமான அரசியல் நிலைப்பாடுகள் இருந்தாக வேண்டும். அப்படியான ஒரு அரசியல் நிலைப்பாட்டை நோக்கி நகரும் போக்கும் தூண்டிலில் காணப்படவில்லை. தூண்டிலில் வரும் பிரசைகளின் தேசியம் சம்பந்தமான விவாதத்தைத் தொடர்ச்சியாகப் படித்தால் நான் இப்படிச் சொல்வதற்கான காரணம் புரியும். பிரசைகள் தேசியம், தேசிய சக்தி பற்றி வரையறுக்க முனைகிறார்கள். இவர்களின் நாடகபாணி உரையாடல் விவாதத்தின் மூலம் தீர்வு காணப்படக் கூடிய விடயமல்ல தேசியம் என்பது. அதற்கு ஆழமான தத்துவார்த்த விளக்கங்களும், தெளிவான எழுத்து நடையும் தேவை. தூண்டிலின் தேசியம் பற்றிய உரையாடல் பாணி விவாதமானது அநேகமாக முடிவுற்ற மாதிரித்

www.tamilarangam.net

தான். ஆனால் இதிலிருந்து யாருக்கு - தூண்டிலுக்குக் கூட - என்ன விளக்கம் கிடைத்திருக்கிறது?

புலிகள் பற்றிய தூண்டிலின் நிலைப்பாடு-

1. புலிகள் இந்தியாவுடன் மோதினார்கள். அதனால் அவர்கள் தேசிய சக்திகள்.
2. தேசியத்தில் ஊசலாடுவதால் முதலாளித்துவ சக்திகள்.
3. இந்தியாவை எதிர்த்ததால் புலிகளின் தேசியம் முதலாளித்துவ தேசியம்.
4. இதனால் அவர்களது தேசியம் தரகு முதலாளித்துவமானதல்ல.

ஆகவே 1+2=3+4

இப்படியான தர்க்கங்களுக் கூடாகவே தூண்டில் தனது கருத்துகளை முன்வைக்கிறது. இதுவே தூண்டில் தனது கருத்துகளை உருவாக்கும் `ஸ்ரைல்`ஆகவும் இருக்கிறது.

ரஜீவ்காந்தி கொலை சம்பந்தமான விவாதங்களில் கூட தூண்டில் பலரதும் கருத்துகளை விவாத அடிப்படையில் பிரசுரித்ததே தவிர தனது கோட்பாட்டு ரீதியான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. இப்படியாகத் தமிழ்த் தேசியப் போராட்டம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு கோட்பாட்டு ரீதியான முடிவுக்கு வராமல் அவற்றை வெறுமனே விவாதத்திற்கெடுத்துவிட்டு குறிப்பிட்ட காலத்தின் பின் அந்தப் பைலை மூடிவிடுவது தூண்டிலின் "பொழு

---



" நாஸியள் எங்களுக்கு அடிக்க மாட்டாங்கள். ரமிலியனுக்கு பிரச்சினை என்டு நாஸியளுக்குத் தெரியும். கறுப்பங்களைத்தான் அவங்களுக்கு கண்ணிலை காட்டேலாது "

– *இன்னன்னா*

www.tamilarangam.net

துபோக்காயுள்ளது".

முற்போக்கான அரசியலைப் பற்றிய ஆர்வம் தூண்டிலுக்கு இருந்தாலும், அதற்குச் சரியான கருத்து வடிவம் கொடுப்பதில் தூண்டில் மிகப் பலவீனமானதாகவே இருக்கிறது. (உ+ம்: மூன்றாவது பாதை) அதை நோக்கி நகரும் போக்கும் தூண்டிலிடம் தெரியவில்லை. கோட்பாட்டு ரீதியான நிலைப்பாடுகளே ஒரு சஞ்சிகை/ ஒரு குழு தான் ஏற்படுத்திக் கொண்ட இலக்கை அடைவதற்கான அடித்தளமாயிருக்கும். இதுவே ஒத்த சிந்தனையாளர்களை அதை நோக்கி ஈர்ப்பதோடு சரியான நடைமுறைக்கான மார்க்கத்தைக் காட்டுவதாயிருக்கும். கோட்பாட்டு ரீதியான நிலைப்பாடுகளுக் கூடாகவே அரசியலுக்குப் புதியவர்களை வளர்த்தெடுக்கவும் முடியும். இந் நிலைப்பாடு சஞ்சிகை/ குழுக்களுக்கு மாத்திரமல்ல தனி நபருக்குக்கூட அவசியமானது. கோட்பாட்டு ரீதியான நிலைப்பாடில்லாத தனிநபர்கள்/சஞ்சிகை /குழுக்கள் அரசியல் ஊசலாட்டமுடையவர்களாகவும், குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட முடிவுகளை வந்தடைய/தேர்ந்தெடுக்க திராணியற்றவர்களாகவும் இருப்பார்கள். இது சமூகத்தின் அரசியல் போக்கு முழுவதையுமே பாதிப்பதாயிருக்கும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஆரோக்கியமான ஒரு நிலைப்பாட்டை நோக்கி நகரும் - ஆரோக்கியமான கருத்து நிலைப்பாட்டை உடைய - ஒரு சஞ்சிகையாகத் தூண்டில் இல்லை. உப்புச் சப்பில்லாத பல சரக்குகளை ஒற்றைகளை நிரப்புவதற்காக சேர்த்துக்கொண்டு சில நேரங்களில் ஒரே அறுவை.

தூண்டிலைவிட 'மனிதம்' சில விடயங்களைக் காத்திரமாகப் பார்த்திருக்கிறது.

- .....ணி (ஈழம்)

# அரைத்த மாவையே அரைத்து...!

ஜேர்மனியில் நூல் வடிவம் பெற்றுப் பல பத்திரிகைகள் வெளிவந்து கொண்டுள்ளன. இந்தத் துறையில் படைப்புகளின் எண்ணிக்கை முக்கியமல்ல. அவற்றின் தரம் முக்கியம். சிறந்த படைப்பில் கலைநயம், மனிதநேயம், சமூக உணர்வு மூன்றும் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். புதிய மனிதன், புதிய சமுதாயம், புதிய பண்பாடு படைக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இப்போதுள்ளோம். ஆனால் இங்கு வரும் பல பத்திரிகைகள் அரைத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாவையே மீண்டும் அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பத்திரிகைத் தரத்தை உயர்த்த அவர்கள் போக்கில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பத்திரிகையை வளர்க்க வேண்டும் என்ற அர்ப்பண உள்ளம், விழிப்புணர்வு, சகிப்புத்தன்மை, மற்றவர்களிடம் ஒத்துழைப்பை எதிர்பார்த்தல், விடாமுயற்சி என்பன பத்திரிகை முன்னேற்றத்திற்கு வழி வகுக்க கூடியன. இதைப் பத்திரிகையாளர்கள் உணர்வார்களாக.

தூண்டிலில் எழுதுபவர்களின் மொழிநடையில் என்னால் வித்தியாசம் காணமுடியவில்லை. அது ஏன்? அதனைப் பிரித்தறியுமளவிற்கு எனக்குத் தகுதி காணாதோ நானறியேன். உங்கள் படைப்பின் தரம் இங்குள்ள எமது சமுதாயம் பகுத்தறிந்து எடுக்குமளவைவிடக் கூடியதாகவுள்ளது. இலங்கை, இந்தியா வாழ் தமிழர்கள் சிறந்த பத்திரிகை என ஒத்துக்கொள்ளக் கூடிய நிலையில் உள்ளது. உங்களிற்கு நான் சூடும் புகழாரம் அல்ல இது. நான் கூற நினைப்பது இங்குள்ள எமது நிலைக்குக் கொஞ்சம் இறங்கி வாருங்கள். பத்திரிகையின் கருவை ஒரு பாதையில் மட்டும் செலுத்தாமல் புதிய தலைமுறையை உருவாக்க கலைக் கடமையையும், சமுதாயக் கடமையையும் சீரிணைத்து எண்ணங்களை பல திசையிலும் செலுத்தி முன்னேற்ற உதவுங்கள்.

– சிவரட்ணராஜா

## ஆண்தலைப்பட்சம்!

வெளிநாட்டு அகதிகளின் வாழ்வினை இன்று அச்சுறுத்தும் இனவாதத்தினை றஞ்சினியின் 'எங்களால் முடியும்' கட்டுரை எளிமையான உரையாடல் வடிவில் யதார்த்தமாகச் சித்தரித்திருந்தது. எங்களைச் சுற்றியுள்ள பிரச்சினையைப் பற்றிக் கதைப்பதும், விவாதிப்பதும் தனியே ஆண்களின் வேலை என்ற மரபினை வெளிப்படுத்தும் ஆண்பாத்திரங்களின், எந்தப் பிரச்சினையானாலும் அவற்றை ஆண்தலைப்பட்ச பார்வையுடன் அணுகும் உரையாடல்களிலிருந்து வேறுபட்டு பெண்களிருவர் தமது கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருப்பது ஆரோக்கியமான விடயமாகும்.

யுத்தத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கும் நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்வினைப் பற்றிய புதிய பார்வையாக அமைந்திருந்த 'பலிக்கடாக்கள்' சிறுகதையும், ஆரோக்கியமான கருத்துகளைக் கொண்டிருந்த 'தற்கொலையாளிகள்' கட்டுரையும் சிறப்பாக இருந்தன.


– வினோதினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கள்ளர் கூட்டு



( .கலம் 52இன் தொடர் )

**<u>*கத்தோலிக்க கும்பல்*</u>**

அமெரிக்க அரசின் முக்கிய பங்காளிகளான சி.ஐ.ஏ.யின் தலைவர் William Casey, Allen, Clark, Haig, Walters வத்திக்கானுக்கான றீகனின் முதலாவது தூதுவர் William Wilson அனைவரும் றோமன் கத்தோலிக்க பக்தர்கள். இவர்கள் அமெரிக்க - வத்திக்கான் கூட்டை ' புனித ' உறவாகக் கருதினார்கள். பாப்பரசரின் 'தார்மீக' சக்தியுடனும், திருச்சபையின் தத்துவங்களுடனும் அமெரிக்கப் பங்காளிகளின் தீவிர கொம்யூனிஸ எதிர்ப்பும், அமெரிக்க 'ஜனநாயக' வழிபாடும் நன்றாக ஒத்துப் போனது. வத்திக்கானுடன் தொடர்பு வைத்திருப்பதால் நடைமுறையில் கிடைக்கக் கூடிய பலத்தையும், இலாபங்களையும் கணக்குப் போட்ட றீகனின் முழுமையான ஆதரவு இல்லையெனில் வத்திக்கான் - அமெரிக்கக் கூட்டு சாத்தியமற்றுப் போயிருக்கக் கூடும். வத்திக்கானை ஓர் அரசாக அங்கீகரிப்பதுடன், நேச அணியாக ஏற்றுக்கொள்ளவும் வேண்டும் என றீகன் கூறியிருந்தார்.

இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியதன் மூலம் மிகவும் தவறான கணிப்பீட்டை கொம்யூனிஸ்டுகள் செய்துவிட்டார்கள் என றீகன் கூறியதாக தே.பா. சபையின் உதவி ஆலோசகர் John Poindexter கூறுகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப் பிழையான கணிப்பீட்டினால் போலந்து அரசு 16 மாதங்கள் வரை 'ஸொலிடர்நொஸ்க்'கை வெளிப்படையாக இயங்கவிட்டபின் அதை உடைத்தது. இதன் மூலம் நாட்டு மக்களிடமிருந்து தன்னை தனிமைப்படுத்திக் கொண்டதுடன், அந் நேரத்தில் பலம் பொருந்தியதாக இருந்த கத்தோலிக்கத் திருச்சபையுடன் நேரடியான மோதலிலும் இறங்கியது.

"இராணுவச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கும், ஸொலிடர் நொஸ்க்கை உடைப்பதற்கும் போலந்து அரசு எடுத்த தீர்மானம் நிலைத்திருக்காது. காரணம் போலந்தின் வரலாறும், அங்கு மதத்தின் பாத்திரமும், பிறவுமாகும்" என்று றீகன் கூறியுள்ளார். "வத்திக்கானுக்கும், அமெரிக்காவுக்குமிடையிலான உறவு உண்மையிலேயே எதிர்பாராத ஒன்றாகும்" என Cardinal Casaroli கூறுகிறார்.

'ஸொலிடர்நொஸ்க்'குக்கு எப்படி உதவி வழங்குவது, இதனால் போலந்து, சோவியத் அரசுகள் எடுக்கும் பதில் நடவடிக்கைகளை எப்படி எதிர்கொள்வது போன்ற முக்கியமான தீர்மானங்களை றீகன், கேஸி, கினார்க் ஆகியோர் போப்பின் ஆலோசனையுடன் எடுத்தார்கள்.

"இந்தத் தீர்மானங்களையும், இரகசியமான திட்டங்களையும் பற்றி றீகன் நன்றாகப் புரிந்து வைத்திருந்தார். சோவியத்தின் தீய தன்மைகள் பற்றி றீகன் குறிப்பிடுவதுடன், அங்கு அரசுக்கு எதிராகப் போராடும் மக்களுக்கு எந்தெந்த வழிகளில் நாங்கள் உதவி செய்யலாம் என்பதையும் கூறுவார். ஹேக், வர்த்தக அமைச்சர் Malcolm Baldrige, வெள்ளைமாளிகையின் உயரதிகாரிகளின் அதிபரான James Baker (இன்றைய வெளிநாட்டமைச்சர்) ஆகியோர் றீகனின் வழிமுறைகள் நடைமுறைச் சாத்தியமற்றவை எனக் கருதினார்கள். George Bush (இன்றைய ஜனாதிபதி) எந்த ஒரு கருத்தும் சொல்லவில்லை. நான் புஷ்ஷின் பின்னாலேயே எந் நேரமும் இருந்தாலும் அவரின் கருத்து எதுவென்று எனக்குத் தெரியாது. ஆனால் எந்தெந்தத் திசைகளில் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை றீகன் அறிந்தேயிருந்தார்" என்று கூறுகிறார் போலந்தில் பிறந்தவரும், முற்போக்குச் சக்திகளுக்கு எதிரானவரும், அமெரிக்கத் தே.பா.சபையின் சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய பகுதிகளுக்கான தலைவருமான Richard Pipes.

மத்திய அமெரிக்காவில் தான் செய்ததைப் போலவே, போலந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லும் இராணுவச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட சில நாட்களின்பின் என்ன செய்ய வேண்டும் என்று மற்றவர்கள் முடிவெடுத்திருக்காத நிலையில், பல முக்கிய திட்டங்களை கேஸி வகுத்தார். இதே நேரத்தில் எந்தெந்த தடைகளை விதிக்கலாம் என்ற திட்டங்களை தே.பா.சபையின் அதிகாரிகளும், பைப்ஸ்'ம் செய்தார்கள். "சோவியத்தை போலந்த் பிரச்சினைகளுடன் சம்பந்தப்படுத்தி, இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்ததற்கு பழி போடுவதுதான் அடிப்படை நோக்கம். நடவடிக்கைகள் யாவும் சி.ஐ.ஏ.யின் இரகசிய இராணுவ தலைமையகத்துடன் கூட்டுச் சேர்ந்தே எடுக்கப்பட்டன. இதன்படி முதலாவதாக 'ஸொலிடர்நொஸ்க்' தொடர்ந்தும் இயங்குவதற்காக பணம், செய்தித் தொடர்புகள், இதற்கான உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன" என்று கூறுகிறார் பைப்ஸ்.

"சூழ்நிலையை முழுமையாக மாற்ற திருச்சபை முழு முயற்சியும் எடுத்தது. அவர்களின் நடவடிக்கைகள் உண்மையாகவே சோவியத் தலையிடும் ஓர் அபாயத்தை ஏற்படுத்தியபோது எங்களை நாடினார்கள். சோவியத்திற்கு எதிரான எங்கள் நடவடிக்கைகளை ஊக்குவித்தார்கள். போலந்து அரசினால் உருவாக்கப்பட்ட அடக்குமுறையையும், இதை எப்படி எதிர்கொள்வது என்பதையும் நாங்கள் எப்படி நோக்கினோமோ அதைப் போலவே திருச்சபையினரும் நோக்கி



www.tamilarangam.net

ளார்கள்" என்று கூறுகிறார் சோவியத்தின் கண்டங்களுக்கிடையிலான குழாய்களைத் தகர்க்கும் திட்டத்திற்குப் பொறுப்பான தே.பா.சபையின் அதிகாரி.

"போலந்த் பற்றி நான் றீகனுடன் ஆலோசித்த நேரங்கள் குறைவானவை. எந்த விடயத்தை பற்றியென்றாலும் நாம் பிரத்தியேகமாகச் சந்திக்கும்போது மூன்று நிமிடங்களுக்கு மேல் றீகன் கதைத்ததில்லை. இது உங்களுக்கு அதிர்ச்சியாயிருக்கலாம். நாங்கள் எங்களுக்கு மட்டுமே உரிய சங்கேத மொழிகளிலேயே தொடர்பு கொண்டோம். றீகன் போலந்தில் என்ன செய்ய விரும்புகிறார் என்று எனக்குத் தெரியும். போலந்தின் நிலமைகள் பற்றி ஆராயும்போது இரகசியத் திட்டங்களை யார்? எங்கே? எதை? எதற்காக? எப்படி? அமுல் செய்வது என்று றீகனும், கேஸியும், நானும் கலந்தாலோசித்தோம். போலந்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், ஆய்வுகள் பற்றிய தகவல்கள் சி.ஐ.ஏ.யினால் தயாரிக்கப்படும் `PDB` (ஜனாதிபதியின் தினசரி தகவல்)யில் மேலதிகமாக இணைக்கப்பட வேண்டும் என நானும் கேஸியும் உத்தரவிட்டோம்" என்று கிளார்க் கூறுகிறார்.

போப்பின் பிரதிநிதிகள் மட்டுமன்றி போப்பும் நேரடியாக அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்து போலந்தில் நிகழும் சம்பவங்களையும், அமெரிக்காவினுடைய நடவடிக்கைகளினால் விளைந்த பலாபலன்களையும் பற்றிக் கடிதங்கள் மூலமாகவோ, வாய்மொழியாகவோ றீகனுக்கு தகவல் அனுப்பிக் கொண்டிருந்தார். ஐரோப்பாவுக்கும், மத்திய கிழக்குக்கும் எப்போது விஜயத்தை மேற்கொண்டாலும் முதலில் ரோமுக்குப் போய் போப்பைச் சந்தித்து தகவல்களைப் பரிமாறி கொள்வார் கேஸி. சி.ஐ.ஏ.யின் முன்னாள் உதவி நிர்வாகி Walters கேஸியுடன் ஒன்றாக வேலை செய்யக் கூடியவர். இவர் தான் வொஷிங்ரனுக்கும், றோமுக்கும் இடையேயான முக்கிய இரகசியத் தூதராகப் பணியாற்றியவர். வோல்ற்றேர்ஸ் சுமார் 12 தடவைகள் போப்பைச் சந்தித்துள்ளார் என்று வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன. "போப்புக்கும், றீகனுக்குமிடையிலான தகவல் பரிமாற்றத்திற்காக றோமுக்கும், வொஷிங்ரனுக்குமாக வோல்ற்றேர்ஸை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். வோல்ற்றேர்ஸ் அங்கிருப்பது பற்றி ஒருவருக்கும் தெரியாது. வோல்ற்றேர்ஸ் மூலம் நடத்தப்பட்ட தகவல் பரிமாற்றங்கள் தனியே போலந்தைப் பற்றியவை மட்டுமல்ல. மத்திய அமெரிக்காவைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றியும், லெபனானிலிருக்கும் கைதிகளைப் பற்றியதாகவும் கூட அமையவிருக்கும்" என்கிறார் வத்திக்கானுக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் Wilson.

அமெரிக்காவின் இரகசிய நடவடிக்கைகளான (அப்கானிஸ்தான், நிக்கரகுவா, அங்கோலா) எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கு "கொலை செய்கின்ற உதவிகள்" வழங்குவது றீகனின் ஆட்சிக் காலத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றது. இவை ஆயுதம், கூலிப்படைகள், இராணுவ ஆலோசனைகள், வெடிகுண்டுகள் என்பனவாகும். போலந்தில் போப், றீகன், கேஸி ஆகியோர் கூட்டாக எதிர் நடவடிக்கைகளில் இறங்கினார்கள். "எனினும் இவர்கள் தாங்கள் நேரடியாக ஈடுபடாமல், போலந்தில் ஏற்கெனவே இருந்த எதிர்ப்புரட்சிகர சக்திகள் மூலம் தாங்கள் நோக்கங்களைச் சாதித்தார்கள்" என்கிறார் ஒரு ஆய்வாளர். றீகன் - கேஸி கூட்டு நடவடிக்கைகள் மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்டவை என்பதுடன் சி.ஐ.ஏ.யின் நடவடிக்கைகளைவிட நவீனத்துவமானவை.

"றீகனும், கேஸியும் விரும்பியதையே உலகம் 1991இல் கேட்டது" என்று ஒரு அவதானி சொல்கிறார். *(தொடரும்)*

- தமிழில்: மனோ

---



" மக்கள் எம் பக்கம் இருக்கையில் எம்மை யாராலும் அசைக்க முடியாது"

- *இன்னொன்னா*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்கதை 58




"ஐயோ"

"ஐயோ"

"என்னடா? ஏன்ரா சாமத்திலை கத்துறாய்?" பாலகுமாரும், முத்துவும் ஞானத்தை உலுப்பினார்கள்.

"ஐயோ அம்மா" ஞானம் கண்களைத் திறக்காமலே கத்தினான்.

"கனவு காணுறான். ஆளை உடன எழுப்பு" முத்து கிளாஸில் தண்ணீர் எடுத்து வரப் போக, பாலகுமார் ஞானத்தின் கன்னத்தில் அறைய, திடுக்கிட்டு எழும்பினான்.

"அம்மா... மீனா..."

"மொஸ்கோவிலை நிக்கிறம். என்ன கனவு கண்டனி?"

"கனவு...? அம்மா..? மீனா..? குண்டு..?" ஞானம் கனவிலிருந்து மீள நேரம் எடுத்தது. பிறகு அழுதான்.

"என்னடா" என்று பாலகுமார் ஆதரவாக தடவிக் கொடுத்தான்.

முத்து தண்ணீர் கிளாஸை நீட்டினான்.

"அம்மா ... மீனா ... குண்டு.. வெடிச்சு..." ஞானம் அழுதான். இருவரும் அவனை ஆறுதல் படுத்தினார்கள்.

"விடியக் கதைப்பம். இப்ப படு"

ஞானம் படுக்கவில்லை.

"கொஞ்சம் சப்பட்டை வாத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடுப்பமே. அப்பதான் பேசாம படுப்பான்" பாலகுமார் தன் ஐடியா எப்படி என்பதுபோல் மூத்துவைப் பார்த்தான்.

"உனக்கு உப்பிடி ஐடியாதான் வரும்" மூத்து ஞானத்தைச் சரித்து, போர்வையால் மூடினான்.

ஞானத்தால் நித்திரைகொள்ள முடியவில்லை. இவ்வளவுநாளும் இல்லாமல் ஏன் இப்படிக் கனவு? பலிக்குமா? சீச்சீ.. அம்மாவுக்கும், மீனாவுக்கும் ஒன்டும் நடக்காது. கட்டாயம் தப்புவினம்.

முதல் நாள் காலை வேறிடத்திற்குப் போயிருந்தபோது தற்செயலாக வீரகேசரி பார்க்க வேண்டி வந்தது. அவனது ஊரில் விமானத் தாக்குதல் என்று பரபரப்பாக செய்தி வெளியிட்டிருந்தார்கள். தாக்கப்பட்ட இடங்களின் படங்கள் வேறு பிரசுரிக்கப்பட்டிருந்தன. அதியுத்தம சனாதிபதியின் திறப்புவிழா பேச்சுகளை தவிர்த்து எல்லா இடமும் தாக்குதல் செய்திகள். மனசு முழுக்க அவை பதிந்துவிட்டன.

எத்தனை வருடங்களாகத் தாக்குதல் நடக்குது. இப்ப மட்டும் மனசு ஏன் பரபரக்குது? சொந்த ஊரில் தாக்குதல் என்றால் மட்டுந்தான் கவலை வருமா? இரத்த உறவுகளுக்குப் பாதிப்பு என்றால் மட்டுந்தான் கண்ணீர் வருமா?

ஞானம் புரண்டு புரண்டு படுத்தான். மற்ற இருவரும் விட்ட இடத்திலிருந்து மறுபடி நித்திரையைத் தொடங்கியிருந்தார்கள். அவர்கள் பேப்பர் பார்க்கவில்லைப் போலும். அல்லது அவர்களது ஊர் தாக்கப்படவில்லைப் போலும்...

அம்மாவும், மீனாவும் இப்ப எப்படி இருப்பார்கள்? எங்கே இருப்பார்கள்? கடிதம் போட்டு எத்தனை மாதங்கள் வரும்? இப்போது எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பார்கள்...?

விடியும்வரைதான் இத்தனையும். முகம் கழுவும்போது நேற்றைய நினைவுகளும் கழுவப்பட்டு விட்டன. "என்னடா ராத்திரி அந்தக் கத்து கத்தினாய்?" என்று கேட்டபோது சிரித்தான்.

59.

மாரிகாலம் தனக்குரிய அடையாளங்களுடன் வியாபித்திருந்தது. இருள் வெகு சீக்கிரமாய் வந்து மின்சாரம் செலவழித்தது. கிறிஸ்மஸ் அலங்காரங்கள் பல இடங்களில் ஆரம்பித்திருந்தார்கள். ஸமர் உடைகளை மலிவு விற்பனையாக பொய் சொல்லி விற்று முடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்த வெற்றியில் தடித்த வின்ரர் உடைகள் 'ஷோ' காட்டின.

ரி.வி.யில் வில்லிபிராண்ட் காலமானது, நவற்றிலோவா - சபற்றினா ரெலிஸ், பொலநறுவை யில் முஸ்லீம்களைப் புலிகள் கொன்றது, டொச்லாண்டுக்கு அக திகள் வந்து குவிவது, எந்த மாநிலத்தில் அடுத்தநாள் மழை பெய்யும்... எல்லாம் காட்டினார் கள்.

உதயனின் றூமில் முத்துவும், அவனும் சாப்பிட்டு முடித்து கை கழுவினார்கள். FF ரக்கையை லீன் ஸில் துடைத்தபடி செற்றிக்கு வந் தான் முத்து.

"குடிக்க...?"

"மினறல்வஸர்"

இரண்டு கிளாஸ் வந்தது. உத யன் பக்கத்தில் வந்து அமர்ந் தான். உதயனின் றூம்மேற் கட்டி லில் படுத்திருந்தபடி சினிமா எக் ஸ்பிரஸ்ஸில் குஷ்புவின் மேனி அழகுக்கு லக்ஸ் சோப்பை விட வேறென்ன காரணங்கள் என்று ஆராய்ந்து கொண்டிருந்தான்.

"அப்ப என்ன பிளான்?"

"என்னத்தை பிளான்?"

"என்ன நீரே சோந்து போனீர்?"

"ஏதேன் செய்தாத்தானே சோருறத்துக்கு"

"ஒண்டுமே செய்யேலையே?"

இல்லை என்று தலையாட்டி விட்டு முத்து தனது நினைவுகளை றிவைண்ட் பண்ணினான். கடந்த 58 அத்தியாயங்களிலும் படுத்தல், எழும்புதல், சமைத்தல், சாப்பிடு தல், உலாத்தல், ரீ.வி, தண்ணி, படுத்தல்...! கொஞ்ச வருசமாகப் பக்றியில் வேலை. வேறை..?

"மலைப் பாம்பொண்டு பெரிய மானொன்டை சாப்பிட வெளிக் கிட்டு கடைசியா உள்ளுக்கையும் விழுங்கேலாம, வெளியாலயும் கக்கேலாம பேசாமப் படுத்துக் கிடந்துதாம் எண்டு வீரகேசரி யில வந்துது. அத மாதிரித்தான் எங்கடை சீவியமும். இஞ்சயும் மனம் வைச்சு வாழேலாமக் கிடக்கு. நாட்டுக்கும் போகேலா மக் கிடக்கு" முத்து சொல்ல, சினிமா எக்ஸ்பிரஸ் றூம்மேற் தலையைத் திருப்பி இவர்களைப் பார்த்து கொடுப்புக்குள் சிரித்து விட்டு மறுபடி குஷ்புவுக்குள் போனான்.

"முந்தி நான் கதைச்ச விசயம் என்ன மாதிரி? லைப்ரறி தொடங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறதை பற்றி யோசிச்சனீரே?" உதயன் மறக்காமல் விசாரித்தான்.

"யோசிச்சதோட விட்டிருக்கலாம். கதைக்க வெளிக்கிட்டு என்னைக்கொண்டு போய் விசராஸ்பத்திரியிலை சேக்காத குறை"

"உம்மடை லாகறிலை, ஸ்ரட்டிலை ஒருத்தருக்கும் புத்தகம், பேப்பர் வாசிக்கிற இன்ரஸ்ட் இல்லையே?"

"இல்லை ஆனா இருக்கு. ஒண்டு நைரம் இல்லை, மற்றது வேறை திசை. ஏசியன்சொப் வைச்சிருக்கிற சிநேகிதன் சொன்னான் பாரிஸ் ஈழநாடு, திரைச்சித்திரா, பேசும்படம்தான் உடனை அழியுதாம்"

றூம்மேற்றின் கொடுப்புக்குள் மீண்டும் சிரிப்பு.


"சாங்கம் ஏதாவது?"

"ஆக்களைப் பிடிக்கிறதெண்டால் தியேட்டரிலைதான் கூட்டம் வைக்க வேணும்" முத்து மிஞறல் வஸர் குடித்துவிட்டு மணி பார்த்தான்.

"என்ன அவசரம். றூமிலை ஏதேன் வெட்டிப் புடுங்குற அலுவலே?"

முத்து பதில் சொல்லவில்லை. அலுவல் என்று சொல்லக் கூடியதாக எதுவும் இல்லைத்தான்.

"படம் ஏதேன் பாப்பமே?"





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றும்மேற் எழுந்து கசற் தள்ளி, றிமோட் கொன்றோலர் தொட "றோஜா". பாலசந்தர், மணி ரத்தினம் கூட்டு.

"இந்திரா கொங்கிரஸ் கட்சிக்காண்டி எடுத்த படம்தான். நல்ல சாமான் கையில வைச்சிருக்கிறாங்கள். தாங்களுக்குத் தேவையான எல்லாத்தையும் சனத்துக்குள்ளை மெதுவா புகுத்துறாங்கள்" என்றான் உதயன்.

"பாட்டு திறம். புதான்தான் இசை. பேயாய் செய்திருக்கிறான்" றும்மேற்.

"என்ன ராஜீவைப் பற்றியே கதை?" – முத்து.

"இந்தியன் கவுண்மேந்தின்ரை கொள்கை. முழுப் பாரதம். இந்தியனாமிதான் மக்களின்ரை காவலராம். நக்சலைற்றுகள் பயங்கரவாதிகளாம்"

"காஷ்மீரிலைதான் முக்கவாசிப்படம் படமாக்கியிருக்கிறாங்கள். அந்த மாதிரித்தான் இடம்" – றும்மேற்

"இலங்கையில இந்தியனாமி செய்ய அட்டகாசங்களை படமாய் எடுத்துவிட்டாத்தான் விளங்கும்"

றும்மேற் றிமோட் கொன்றோலறால் சத்தம் அதிகரிக்க, தங்களுடைய கதை அவனுக்குப் பிடிக்கவில்லை என்று லேற்றாக் விளங்கிக்கொண்டு முத்துவும், உதயனும் மௌனமானார்கள்.

முத்து தனது றூமுக்கு வெளிக்கிடும்போது பத்து மணியாகிவிட்டிருந்தது. பஸ்ஸை 'விட்டிறங்கியதும் காத்திருந்த குளிர் முகத்தில் பூசியது.

பாதையில் யாருமில்லை. றெஸ்ரோறண்டில் வெளிச்சமும், பாட்டும். ஜப்பான் கார்கள் இருட்டைப் பிய்த்துக்கொண்டு சீறின.

டொச்காரர் பிளான் போட்டு வாழுறாங்கள். திங்கள் பிற்ஸா, சனி சீனா றெஸ்ரோறண்ட், வெள்ளி படம்... எங்கடை சீவியம்..!

றோஜா பாட்டு ஞாபகம் வந்தது. "சின்னச் சின்ன ஆசை.."

எந்த ஆசையை வைத்திருப்பது? எதை விட்டுவிடுவது? எல்லா வழியுமே அடைத்த மாதிரி. எல்லாவற்றையும் பிய்த்துக் கொண்டு ஓடவேண்டும் போலிருந்தது.

( இன்னும் வரும் )

பார்த்திபன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




03.08.1992 (வீ) 000000000
நாடு முழுவதும் கடந்த யூலை மாதத்தில் மாத்திரம் 803 பேர் கொல்லபபட்டுள்ளனர். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 692 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 20க்கும் மேற்பட்டோர் கடத்தப்பட்டுள்ளனர்.

08.08.1992 (வீ) 000000000
வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்தக் கோரி முஸ்லீம் முற்போக்கு முன்னணியினர் மருதானை ஜும்மா பள்ளிவாசலில் ஆர்பாட்டம் செய்தனர். யுத்தத்தை நிறுத்து, இனவாதத்தை நிறுத்து, யுத்தத்தில் எல்லா இன மக்களும் அழிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற சுலோகங்களை இவர்கள் வைத்திருக்கின்றனர்.

பிரேமதாசாவைப் பதவி விலகக் கோரும் மனுவொன்றுக்கு கையெழுத்துச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்த ஐ.தே.மு கட்சியின் ஆதரவாளர்கள் கும்பல் ஒன்றினால் தாக்கப்பட்டனர். அங்கிருந்த புகைப் படப் பிடிப்பாளரும் தாக்கப் பட்டுள்ளனர்.

48 வருடங்களுக்கு முன் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்ற 84 ஆயிரம் மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்புவதில் எந்த மாற்றமுமில்லை எனப் பிரதமர் அறிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடைகளில் மாணவரின் மதிய உணவு முத்திரைக்கு தும்புக்கட்டை, விளக்குமாறு போன்றவையே வழங்கப்படுகின்றன.

தொண்டமான் விரும்பினால் இந்தியாவுக்குப் போகலாம். ஒருவேளை அந்த நாட்டின் பிரதமராக இல்லையேல் தமிழ்நாட்டின் முதல்வராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாம். எம்.ஜி.ஆரை கிளிநொச்சித்தேனையிலிருந்து அனுப்பியவர்கள் நாங்கள். ஆனால் எங்களுக்குத்தான் இலங்கையை விட்டால் வேறு நாடில்லை - சு.க.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் கொழும்பில் தமிழ் வாலிபர்கள் தொடர்ந்து கைதாகி வருகின்றனர்.

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் சாளி130 ரக இராணுவச் சரக்கு விமானங்களை வாங்க வேண்டும் என விமானப்படை சிபார்சு செய்துள்ளது.

10.08.1992 (வீ) 000000000
புனானை, மைலந்தனை தமிழ்க் கிராமத்திற்கு உள்ளே புகுந்து அரசபடைகள் 35 தமிழ்க் கிராமவாசிகளை வெட்டியும், சுட்டும் கொலை செய்துள்ளன. 10பேர் இதில் காயமடைந்துள்ளனர்.

1968ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜி.சி.ஈ(ஓ/எல், ஏ/எல்) பரீட்சைகளில் தோற்றிய 1 கோடி 5 இலட்சம் பரீட்சார்த்திகளுக்கும் இதுவரை பரீட்சை திணைக்களம் சான்றிதழ்களை வழங்கவில்லை.

12.08.1992 (வீ) 0000000000
தென்பகுதி பொலிஸ் நிலையமொன்றில் காவலில் வைக்கப்பட்டிருந்த இளம்பெண் ஒருவர் பொலிஸாரால் அங்கு வைத்து பாலியற் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

13.08.1992 (வீ) 000000000
தென்மராட்சியில் விமானத் தாக்குதல் நடாத்தப்படுகிறது. பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

14.08.1992 (வீ) 000000000
தற்கொலையில் இலங்கை உலகநாடுகள் வரிசையில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மாவட்ட ரீதியில் வவுனியாவிலேயே அதிக தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன.

17.08.1992 (வீ) 000000000
வடக்கு-கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை உள்ளடக்கிய தான முஸ்லீம் மாகாணசபையை தமிழ்க்கட்சிகளும், அமைப்புகளும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு பூரண ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற தீர்மானம் புத்தளம் நகரசபை மண்டபத்தில் கூடியிருந்த வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களால் நிறைவேற்றி வைக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

18.08.1992 (வீ) 0000000000
இராணுவத்தினரால் மூறக் கொட்டாஞ்சேனையில் கைது செய்யப்பட்ட 9 பேர் பற்றியும், கொம்மாதுறையில் கைது செய்யப்பட்ட 3 பேர் பற்றியும் இதுவரை எதுவித தகவலுமில்லை.

19.08.1992 (வீ) 000000000
யாழ்குடா நாட்டில் ஷெல் தாக்குதல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 18 வருடம் காணாத கடுமையான வரட்சி நிலவுகிறது. குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சர்வகட்சி மகாநாடு 81 தடவை கூடி 134 1/2 மணித்தியாலம் ஆலோசித்தமைக்கு செலவழிந்த தொகை 18 இலட்சத்து 40ஆயிரம் ரூபா.

1953 ஹர்த்தால் போராட்டத்தை நினைவு கூருமுகமாக கிராண்ட்பாஸில் எதிர்க்கட்சிகள் நடத்திய பொதுக்கூட்டம் ஐ.தே. கட்சியினராலும் அவர்களின் ஆதரவாளர்களினாலும் கல்லெறி மற்றும் அடாவடித்தனங்களால் குழப்பப்பட்டது. இதில் பலர் காயமடைந்துள்ளனர். எனினும் கால் மணி நேர இடைவெளிக்குப் பின் மீண்டும் கூட்டம் நடைபெற்றது.

20.08.1992 (வீ) 000000000
பத்திரிகையாளர்கள் அடிக்கடி குண்டர்களால் தாக்கப்படுவதைக் கண்டித்தும், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் பத்திரிகையாளர்கள் கொழும்பில் ஆர்பாட்டம் செய்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் இவ்வார்பாட்டத்தில் கலந்து கொண்டு கோஷமிட்டனர்.

அரசியல் கேலிச் சித்திரக்காரர் யூஹுாஸ் பொரளை வீதியில் வைத்து கும்பலொன்றினால் கத்தியால் குத்தப்பட்டார்.

21.08.1992 (வீ) 000000000
வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் தமிழர்கள் வெற்றி வாகை சூடும் நாள் நெருங்கி வருகிறது. எனவே பெரும்பான்மைச் சமூகம் ஒன்றுசேர வேண்டும். அவர்களை ஒன்றிணைக்கும் பொறுப்பு இப்போது பௌத்த பிக்குகளின் மேல் விழுந்துள்ளது

தென்னிலங்கையில் பிரதான மஹாநாயக்க தேரோ.

23.08.92 (வீ) 000000000000
இலங்கைக்கு நிதியுதவி வழ

www.tamilarangam.net

ங்கும் மேற்கு நாடுகள் சர்வதேச கண்காணிப்பின் கீழ் யுத்த நிறுத்தமொன்றை நடைமுறைப்படுத்த இலங்கை அரசையும், புலிகளையும் வலியுறுத்த வேண்டும். எதிரணிக்கட்சிகள், பத்திரிகைகள், தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் மீதான தாக்குதல்களை அரசாங்கம் நிறுத்த வேண்டும். புலிகள் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்துள்ள சண்டையில் ஈடுபடாத பொது மக்களை விடுதலை செய்ய வேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பார்வையிடப் புலிகள் அனுமதிக்க வேண்டும். புலிகள் அப்பாவிகள் மீது நடாத்தும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் - யாழ்ப்பிரஜைகள் குழு இலங்கையிலுள்ள நிதியுதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து.

மொனறாகலை மாவட்டத்தில் அன்னாசிச் செய்கைக்கு அமெரிக்க நிறுவனமொன்றிற்கு 10 ஆயிரம் ஏக்கர் காணியை வழங்கினால் அதனை எதிர்த்து இம் மாவட்ட விவசாயிகள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

காரணம் கூறப்படாமல் கைதாகி, நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாது, தடுப்புக்காவல் உத்தரவு அல்லது அவசரகால விதிகளின் கீழ் கொழும்பு மகஸீன் சிறையிலும், களுத்துறைச் சிறைச்சாலையிலும் சுமார் 600 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

24.08.92 (வீ) 000000000000

மட்டக்களப்பு-அம்பாறை எல்லைக் கிராமத்தில் 3 முஸ்லீம் விவசாயிகள் கொல்லப்பட்டதையடுத்து தமிழ் விவசாயிகளின் நெற்போர்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து தமிழ் மக்கள் அயற்கிராமங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

27.08.92 (வீ) 000000000000

அரசுக்குச் சொந்தமாயிருந்த தோட்டங்களை 22 கொம்பனிகள் கையேற்றபின் நடைபெற்ற முதலாவது அடையாள வேலை நிறுத்தத்தில் 4 இலட்சம் தொழிலாளர் பங்கு பற்றினர். இ.தொ.கா. இவ் வேலை நிறுத்தத்திற்கு எதிராக இயங்கியது.

www.tamilarangam.net

# உயிர்த்தெழாதுறங்கும்
# என் பால்ய நண்பனுக்கு

சவாரி வண்டிகள் தயாராய் நின்றதும்
கன்னைகள் பிரிந்ததும்,
நுகத்தின் முன்னே பசுங்குழை கட்டி
இணையா முனைகளில் எம்மை இணைத்ததும்
இடையில் அறுத்து நான் ஒட்டம் பிடித்ததும்
பசுங்குழை புசிக்க நீ
இறக்கும் வரையிலும் வண்டி இழுத்ததும்...

நண்ப!

அடிவானை ஆதவன் புணர்ந்து
ஆளுமை இழந்த ஓர் அந்தி வேளையில்
உனைக் கடைசியாய் கண்ட
ஞாபகக் குமிழ்களை
காற்றில் ஆடும் ஏழாவது புதுக் கலண்டர்
உடைக்கும் இப்பொழுதிலும்
அதே! அதே! பழங்குழை!!

www.tamilarangam.net


நீயும் இல்லை நானும் இல்லை.
நுகமுனை இரண்டிலும் வெறுமையும் இல்லை.
வண்டி நகர்வது தொடர்கிறது.
வண்டியோட்டி சாவகாசமாய்
"ஹ.. ஹஹ்ஹஹ்... ஹெய்..."

கன்றிப்போய்..
விஸ்தரிக்க முடியா
வார்த்தைகள் துணையுடன்
உன்னை நினைந்தொரு
கவிதை புனைவதும்
ஒட்டா மண்ணால் பானை வனைவதும்
முயற்சிதான்.

அழகிய பானைகள் வனைந்து மகிழ்வுற
அவகாசமின்றி
களிமண் பூமியில் கந்தகம் விளைந்ததால்
அவசரமாகப் புலம்பெயர்ந்தொதுங்கிய
ஆற்றங்கரையில் பானைவனைவது
ஒட்டா மண்ணால்
பானை வனைவது
முயற்சிதான் ! சேராதிருக்கவும் பயிற்சிதான்!!

*

இரா. ரஜீன்குமார்



www.tamilarangam.net

# தமிழக நிலமைகள் பற்றி கேடயத்தின் கடிதம்..


கேடயம்
புரட்சிகர அரசியல் இதழ்
மாதமிருமுறை
த. பெ. எண். 2480
சென்னை - 29.
KEDAYAM, REVOLUTIONARY FORTNIGHTLY, P. B. No. 2480, MADRAS-6000 029.

"கேடயம்" இதழ் தவிர்க்க இயலாத காரணங்களால் நிறுத்தப் பட்டிருப்பினும் எமது பிற இயக்க நடவடிக்கைகள் தொடர்கின்றன. தமிழக அரசியலில் ஜெயலலிதா கும்பலின் காட்டாட்சி குறித்த செய் திகளை அறிந்திருப்பீர்கள்.

ராஜீவ், பத்மநாபா கொலை வழக்கு விசாரணை என்ற பெயரில் கைது வேட்டைகள், ஈழ அகதிகள் கட்டாய வெளியேற்றம், புலிகள் மீது தடை, புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டாலோ, சிந்தித்தாலோ ஏழாண்டு சிறை, பத்திரிகைகளைத் தண்டிக்க சட்டசபையில் கூண்டு, கூட்டங்கள் நடத்தத் தடை, சுவரொட்டி ஒட்டவும் தடை என புரட்சி கர, ஜனனாயக இயக்கங்களைக் குறிவைத்து 'ஜெ' கும்பல் தாக்கு தல்களைத் குவித்து வருகின்றது. மறுபக்கம் அதிகார வர்க்கம், பார் ப்பன பத்திரிகைகளின் அரவணைப்பில் இந்துமதவாத மீட்பு நடவடிக் கைகளிலும், ஊழல், கொள்ளைகளிலும் கவனம் செலுத்தி வருகின்றது. முன்னெப்போதும் இல்லாதளவு இப்போது தமிழகத்தில் அடக்கு முறைச் சூழல் ஜனனாயக இயக்கங்களுக்கு பெரும் சவாலாக நிலவு கின்றது.

www.tamilarangam.net

இச் சூழலிலும் இவ்வாட்சிக்கு எதிரான பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் முனைப்போடு இருக்கின்றோம். கடந்த ஆண்டு 'அகதிகளை வெளியேற்றாதே, போராளிகளை இழிவு படுத்தாதே' என்ற முழக்கத்தின் கீழ் எடுக்கப்பட்ட இயக்கத்தில் 'தேசப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்'(NSA) கைதான தோழர்கள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் NSAயை முறியடித்து விடுதலையானார்கள். அவர்களை வரவேற்கும் முகமாக தமிழகமெங்கும் 'ஜெ' கும்பலை அம்பலப்படுத்தி இயக்கங்கள் எடுத்தோம். மேநாளை ஒட்டி உலக வல்லாதிக்கத்திற்காக அலையும் அமெரிக்க ஏகாதிபத்தியம், நாட்டை அடகுவைக்கும் காங்கிரஸ் கும்பல், தமிழகத்தைக் காட்டிக் கொடுக்கும் 'ஜெ' கும்பல் ஆகியோரை எதிர்த்து மேநாள் இயக்கங்கள் நடத்தப்பட்டன. லிபியா மீதான ஐ.நா தடையைக் கண்டித்து சென்னை அமெரிக்க தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். தற்போது புலிகள் இயக்கத்திற்கு விதித்த தடையை எதிர்த்து துண்டறிக்கைகள் மூலமாக தமிழகம் தழுவிய விரிவான பிரச்சாரத்தை நடத்தி வருகின்றோம். இவை குறித்த துண்டறிக்கைகளை பிற இயக்கங்கள், பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்து பிரச்சாரத்தை விரிவு படுத்த வேண்டுகிறோம்.



www.tamilarangam.net

# ஐரோப்பியச் சஞ்சிகைகள்

ஐரோப்பாவில் வாழும் தமிழ் அகதிகளிடையே காலத்திற்குக் காலம் பல மாற்றங்கள் இடம் பெற்று வருகின்றன. அறைக்குள் சுவாமிப்படம் வைத்துக் கும்பிட்டதுபோய், கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் வைக்குமளவிற்கு நிலைமைகள் மாறிக் கொண்டிருப்பது கவனத்திற்குரியதாகும். பிரான்ஸில் பக்தர்கள் அளவுகடந்த பக்தியினால் பறவைக்காவடி எடுக்க விண்ணப்பித்ததும், இது ஒரு பயங்கரவாத நடவடிக்கை என்று பிரான்ஸிய அரசு அனுமதி மறுத்ததும்கூட சுவாரஸ்யமான அம்சங்களே. சிதம்பலாகியிருக்கும் ஐரோப்பா வாழ் தமிழ் அகதிகள் அக,புற நிலையில் மாற்றங்களைக் கண்டுகொண்டிருப்பது கவனத்திலெடுக்க வேண்டியதொன்றாகும்.

இந்த அகதிகளை இலகுவான வழியில் இரண்டாகப் பிரிக்கலாம்.

1. தங்கள் பொருளாதார, வாழ்க்கை மேம்பாட்டில் மட்டும் கண்ணும், கருத்துமாக இருப்பவர்கள்.

2. நாடுவிட்டு வந்தாலும், ஏதோ ஒரு வழியில் இலங்கையின் அரசியல் நிகழ்வுகளோடு தங்களைப் பிணைத்துக்கொண்டவர்கள்.

இதில் முதலாவது பிரிவைப் பற்றிப் பெரிதாகச் சொல்லுவதற்கு எதுவுமில்லை.

இரண்டாவது பிரிவினரிடையே ஆரம்ப காலங்களில் ஆதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கம் செலுத்தியவை முன்னாள் ஈழவிடுதலை இயக்கங்களே. நிதி சேகரிப்பு, பிரச்சாரம், செய்தி நிலையம், துண்டுப் பிரசுரங்கள், உண்ணாவிரதம், ஊர்வலம் என்று இந்த இயக்கங்கள் தங்களை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் வகுத்துக்கொண்ட வேலைத் திட்டங்களில் இரண்டாவது பிரிவினர் ஊக்கமாகப் பங்கெடுத்துக் கொண்டனர். யாராவது சந்தேகப்பட்டுக் கேள்விகள் கேட்டாலும் ஈழத்திலுள்ள தலைமைப் பீடங்களால் தயாரிக்கப்பட்ட பதில்கள், கொள்கை விளக்கங்கள் உடனடியாக எடுக்கப்பட்டு கேள்வி கேட்டவர்களின் வாய்கள் அடக்கப்பட்டன. ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது கொலை மிரட்டல்கள் மட்டுமன்றி, தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

1986இல் உள் முரண்பாடுகளினால் புளொட் இயக்கம் உடைந்து சிதறியபோது அவ்வியக்கத்திலிருந்து விமர்சனங்களுடன் வெளியேறியவர்களினால் இயக்கவாதங்களிலிருந்து மீண்டு நிலைமைகளை அவதானிக்க முடிந்தது. அத்துடன் இயக்க மாயையிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் முயற்சியில் பல தகவல்களையும், விமர்சனங்களையும் அவர்கள் வெளியிட்டார்கள். இதற்கு முன்னரும் பல்வேறு இயக்கங்களிலிருந்தும் பலர் விலகிக் கொண்டாலும், தங்கள் மௌனத்தின் மூலம் தங்களையும், இயக்கங்களையும் காப்பாற்றிக் கொண்டார்கள்.

தளத்திலும், பின்தளத்திலுமான கொலைகளும், வெளியேற்றங்களும் ஐரோப்பாவில் வேலை செய்தவர்களையும் பாதித்தன. கோவிந்தன் எழுதிய "புதியதோர் உலகம்" என்ற நாவலும், தீப்பொறியின் பிரசுரங்களும் ஈழ இயக்கங்கள் குறித்தும், நடந்து கொண்டிருந்த போராட்டம் குறித்துமான எச்சரிக்கையை பலருக்குத் தந்தன. ரெலோ மீதான புலிகளின் அரக்கத்தனமான தாக்குதல்கள் புலி ஆதரவாளர்கள் சிலரையும் விழிப்படைய வைத்தன!

இந்த நிலையில்தான் இயக்க வட்டங்களிலிருந்து விலகியவர்களில் ஒரு பிரிவினர் மார்க்ஸிஸ-லெனினிஸ-மாவோயிஸத்தையும், ஒரு பிரிவினர் அனைத்தையும் கேள்விக்குட்படுத்தல்-ஈழ இயக்கங்களை அம்பலப்படுத்தல் என்பதையும், ஒரு பிரிவினர் அகில உலகப் புரட்சியைச் சாதிக்க நான்காம் அகிலத்தையும் நோக்கிப் போனார்கள்.

இதைவிட, ஒன்றும் சரிவராது என்று பலர் ஒதுங்கிப் போனதும், விரக்தியடைந்ததும், இன்னும் பலர் இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று

யேசு சீவிக்கிறார், யெகோவா, அப்போஸ்தலர் போன்ற கிறிஸ்தவக் குழுக்களுடன் சேர்ந்து "மெய்"மறந்ததும்கூட குறிப்பிடத்தக்க நிகழ்வுகளே.

இயக்க உடைவுகளின் தொடர்ச்சியாக, 87இல் இலங்கை-இந்திய ஒப்பந்தமும், இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ். என்பன தமது விசுவாசத்தை "எல்லா" வழிகளிலும் காட்ட இந்த இயக்கங்களின் ஆதரவாளர்களில் பலரும், அதன் பின்பு இலங்கையரசின் ஒத்துழைப்புடன் புலிகள் யாழ்ப்பாணத்தைக் "கைப்பற்றி" தமது தர்ப்பாரை நடாத்த புலி ஆதரவாளர்களில் சிலரும் இந்த இயக்கங்களிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

இந்தப் பின்னணியிலிருந்தே இன்று ஐரோப்பாவில் வெளிவந்து கொண்டிருக்கின்ற அரசியல் சஞ்சிகைகளை நோக்கலாம். இச் சஞ்சிகைகளின் "இயக்கங்களில்லாத" பின்னணி இப்படித்தான் உருவாகியது. இயக்கங்களது ஆதிக்கம் உடைந்து - சுவிஸில் மேதின ஊர்வலத்தில் புலியும், புளொட்டும் சண்டித்தனத்தில் ஈடுபட்டது போன்ற ஒன்றிரண்டு சம்பவங்களைத் தவிர இன்று புலிகளைத் தவிர ஏனைய இயக்கங்கள் ஐரோப்பாவில் செயலிழந்துள்ளன - உருவாகிய இடைவெளியில் இவ்வரசியல் சஞ்சிகைகள் ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தை வகிக்கின்றன.

---



ஐயா ஏஜென்சி வேலையில இறங்கினாப் பிறகு வீட்டுச் சுவர் முழுக்க ஒவ்வொரு நாட்டுப்படமாய்த் தொங்குது"

- இன்னளனா



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளை வசதிக்கு இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. கண்ணைமூடிக்கொண்டு இயக்கங்களைத் துதிபாடுபவை.

2. அனைத்தையும் விமர்சனத்திற்குட்படுத்தி, தேடலை நோக்கியவை.

முதலாவது பிரிவில் அடங்கும் பெரும்பாலான சஞ்சிகைகளில் புலி வாலைப் பிடித்துள்ளவையே அதிகம்.

இரண்டாவது பிரிவில் அநேகமாக ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒவ்வொரு சஞ்சிகையாவது வெளிவருகிறது. எனக்குக் கிடைக்கின்ற சஞ்சிகைகளில் மனிதம், சுவடுகள், அஆஇ, பனிமலர், தூண்டில், சஞ்சீவி, சமர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் பெரும்பாலான சஞ்சிகைகள் ஆரம்பத்தில் இயக்கங்களை அம்பலப்படுத்தியும், கடந்தகாலப் போராட்டத்தைக் கேள்விக்குட்படுத்தியும் அல்லது தரமான கலை, இலக்கியங்களைப் பிரசுரித்தும் வெளிவந்தன. கால ஓட்டத்தில் இன்று இச் சஞ்சிகைகள் தேசிய விடுதலைப் போராட்டமா? வர்க்கப் போராட்டமா? தமிழீழமா? ஐக்கிய இலங்கையா? புலிகள் தரகுமுதலாளிகளா? தேசியமுதலாளிகளா? வர்க்கமே இல்லாதவர்களா? உள்ள பாதையைத் திருத்துவதா? மூன்றாவது பாதையா? இடைக்காலத் தீர்வா? நிரந்தரத் தீர்வா? என்றெல்லாம் விவாதக் களத்தில் குதித்துள்ளன.

சுதந்திரமாக வெளியிடப்படும் கருத்துகளும், விமர்சனங்களும், விவாதங்களும் ஆரோக்கியமானவை. போராட்டத்தைத் திரும்பவும் படுகுழியில் தள்ளி விழுத்தாமல் இருப்பதற்கு இவை அவசியமானவையே. இவற்றின் மூலமாகவும் விடுதலைப் போராட்டத்தைச் சரியான திசையில் நகர்த்திச் செல்ல உதவ முடியும். இந்த வகையில் இவ் விவாதங்களுக்கு மேற்குறிப்பிட்ட சஞ்சிகைகள் முக்கியமளிப்பது வரவேற்கக் கூடிய தொன்றே. எனினும் இங்கே ஒரு கேள்வி எழுகின்றது. இச் சஞ்சிகைகள் விவாதங்களை மட்டுந்தான் நடத்திக்கொண்டிருக்கப் போகின்றனவா?

இந்த இடத்தில் இச் சஞ்சிகைகளின் வாசகர்களை நோக்குவோம். கதை, கவிதை வாசிப்பதுடன் நிறுத்திவிடாமல் போராட்டத்திலும் அக்கறையுள்ளவர்களே இச் சஞ்சிகைகளின் பிரதான வாசகர்களாக இருக்கின்றனர். தங்கள் கருத்துகளைப் பிரதிபலிக்கும் சஞ்சிகைகளுக்கு இவர்கள் அபிமான வாசகர்களாகின்றனர்.

www.tamilarangam.net



" கேமிசுக்குப் போகக் காசில்லையெண்டு சொன்னன். மகன் என்ன சொல்லுறான் தெரியுமே? தனக்கெண்டு வாங்கின கின்ரர்கெல்ற்றைத் தரட்டுமாம். "

- இன்னன்னா

குறிப்பிட்ட வாசகர்கள் சஞ்சிகை ஆசிரியர்களிடம் இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வைக் கோருகின்றனர். அவர்களின் கொள்கை என்ன என்று கேட்கின்றனர். நடைமுறையில் என்ன செய்கிறீர்கள் என்று கேட்கின்றனர். அடையாளம் காட்டுமாறு கூறுகின்றனர். எல்லாவிதமான கருத்துகளையம் எழுதித் தங்களைக் குழப்புவதாகக் கோபமடைகிறார்கள். தங்களிடமிருக்கும் கேள்விகளுக்கு சஞ்சிகை ஆசிரியர்கள் தரும் பதில்களைக்கொண்டு தங்கள் ஆதரவையோ, நிராகரிப்பையோ நடைமுறைப்படுத்துகிறார்கள்.

இதன் மறுபக்கத்தில் சஞ்சிகை ஆசிரியர் குழுவைப் பார்த்தால் அங்கு ஒருவர், இருவரோ அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையைக்கொண்ட ஒரு குழுவோதான் ஆசிரியர் குழுவாக இருக்கிறது. இவர்கள் எந்த இயக்கங்களையும் சாராதவர்கள். இவர்களுக்கிருக்கும் நம்பிக்கையும் இவர்கள் சுயமாக உருவாக்கிக் கொண்டதாகும். ஆக்கங்களைச் சேகரிப்பதிலிருந்து அவற்றைப் புத்தகமாக்குவது, விநியோகிப்பதுவரை ஆசிரியர் குழுவினரே ஈடுபடுகின்றனர். இவர்கள் தமது நேரத்தின் பெரும் பகுதியை இதற்கு ஒதுக்குவதுடன், தங்கள் சொந்தப் பணத்தையும் இதற்குள் இழப்பதை சில சஞ்சிகை ஆசிரியர்களைச் சந்தித்தபோது அறிய முடிந்தது. இதில் எஞ்சுகிற நேரத்தில்தான் இவர்கள் தங்கள் கருத்துகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவாதிப்பதிலும், புதிய கருத்துக ளைத் தேடுவதிலும் ஈடுபட முடி கிறது. சில சஞ்சிகை ஆசிரியர் கள் அதுவுமில்லாமல் ஒரு சஞ் சிகை முடிந்தவுடன் அடுத்த சஞ் சிகையைத் தயாரிக்க ஆயத்த மாகி விடுகிறார்கள்.

இவற்றைக் கொண்டு இங்கே ஒரு சுவாரஸ்யமான அம்சத்தை அவதானிக்க முடியும். சஞ்சிகை யின் வாசகர்களும், ஆசிரியர் குழுக்களும் சஞ்சிகை குறித்து முரண்பாடு கொண்டுள்ள அதே நேரம், உடன்பாடான கருத்தை யும் கொண்டுள்ளார்கள். அதாவது சஞ்சிகையில் சாதிக்க முடியும், சஞ்சிகை என்பது ஒரு முக்கிய மான சாமான்.

ஆசிரியர்களினதும், வாசகர் களினதும் கருத்துகள் ஒருபுறமி ருக்க, சஞ்சிகையின் உண்மை யான நிலை வேறுவிதமாக இரு க்கிறது. அநேகமாக பல சஞ்சி கைகள் 200க்கும் 500க்கும் இடைப்பட்ட பிரதிகளே அச்சாகி ன்றன. இதில் சுமார் 100 பிரதி களுக்கே சந்தா செலுத்தப்படுகி ன்றது. மிகுதியானவை பெட்டிக் குள் முடங்கிவிடுகின்றன அல்லது இலவசமாக விநியோகிக்கப்படு கின்றன. எத்தனையோ ஆயிரம் தமிழ் அகதிகள் இருக்கும் நாடு களில் சஞ்சிகையை விலை கொடு த்து வாங்கும் நிலமை மோசமாக இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

1. றெஸ்ரோறண்டில் வேலை செய்யும் ஒருவருக்கு கிழமையில் ஒருநாள் மட்டுமே லீவு கிடைக் கிறது.
2. தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் வீடு திரும்ப மாலை ஆறுமணிக்கு மேலாகிறது.
3. சனி, ஞாயிறு தினங்களில் வெளியிடங்களுக்குப் போகிறார் கள். சினிமாவுக்குப் போகிறார்கள்.
4. சஞ்சிகைக்குப் பணம் கொடுத் துப் படிப்பதைவிட அப் பணத்தில் வேறு பொருட்கள் வாங்கலாம் என்ற மனோபாவம்.
5. வாசிப்பு ஆர்வம் குறைந்து கொண்டு வருகின்றமை.
6. தமிழகத்திலிருந்து குப்பைச் சஞ்சிகைகள் வந்து குவிகின்றன.
7. வீடியோ சஞ்சிகைகள் வருகி ன்றன.
8. ஒரு சஞ்சிகையை ஒருவர் காசு கொடுத்து வாங்க, பலர் அதை இலவசமாகப் படிக்கின்ற நிலமை.
9. இச் சஞ்சிகைகள் இலங்கைச் செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தல்.

இங்கே இந்தக் காரணங்க ளைக் குறிப்பிடுவதன் நோக்கம் சஞ்சிகைகளின் பொருளாதார நிலமையைக் குறிப்பிடுவதற்கு மட்டுமல்ல. இத்தகைய சூழலும்,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனோநிலையும் உள்ள இடத்திற்கு தங்கள் கருத்துகளைக் கொண்டு செல்வதில் ஆசிரியர்களும், ஆக்கதாரர்களும் எவ்வளவு தூரம் வெற்றியடைந்திருக்கிறார்கள் என்று ஆராய்வதற்கே. எத்தனை சஞ்சிகை ஆசிரியர்கள் இந்த நிலமைகளைக் கணக்கிலெடுத்துள்ளார்கள் என்பதும் கேள்விக்குறியே.

இந்த நிலையில் இந்த அரசியல் சஞ்சிகைகள் குறிப்பிட்ட படிப்பு வட்டத்திற்குள்ளேயே எல்லைப்படுத்தப்படுகின்றன. இந்த அடிப்படையில்தான் இச் சஞ்சிகைகளில் மேற்கொள்ளப்படும் விவாதங்கள், கருத்து மோதல்கள் யாவும் பரவலாகச் சென்றடைகின்றனவா? பலரை இதில் பங்கெடுக்க வைத்திருக்கின்றனவா? ஆசிரியர் குழுவினரோ அல்லது குறிப்பிட்ட ஒருசில ஆக்கதாரரோ தான் தொடர்ந்து இதில் எழுதித் தள்ளுகிறார்களா? விவாதங்கள் மூலம் யார் யார் என்னென்ன உடன்பாட்டிற்கு வந்துள்ளார்கள்? எழுத்துத் திறமையையும், தத்துவார்த்த அறிவையும் காட்ட மட்டுந்தான் கருத்துக் களங்கள் பாவிக்கப்படுகின்றனவா? என்பவையெல்லாம் விடை காணப்பட வேண்டிய கேள்விகள்.

அநேகமாக எல்லாச் சஞ்சிகைகளையும் படிப்பவர்களுக்கு ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள முடியும். அதாவது ஒவ்வொரு சஞ்சிகைக்கும் எழுத என்று குறிப்பிட்ட சிலர் இருக்கி



www.tamilarangam.net

றார்கள். இவர்கள் வேறு சஞ்சிகைகளில் எழுதுவதில்லை. அத்துடன் சில சஞ்சிகைகளில் இப்போது தனிநபர், சஞ்சிகைகள் பற்றிய விமர்சனங்கள் ஆரோக்கியத்தை இழக்கத் தொடங்கியுள்ளன. இது குழுவாதத்தின் அம்சமா என்பது ஆராயப்பட வேண்டியதொன்று. ஏனெனில் ஐரோப்பாவில் இத்தனை சஞ்சிகைகள் வெளிவந்தும் இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக, முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராக இச் சஞ்சிகைகள் இணைந்து கூட்டாக ஒரு துண்டுப் பிரசுரத்தையாவது வெளியிட்டுள்ளனரா? இப்படியொன்றைச் செய்வதற்கு இச் சஞ்சிகைகளின் அபிமான வாசகர்கள் தூண்டியிருக்கிறார்களா?

நாம் என்ன செய்கிறோம்? என்ன எழுதுகிறோம்? சஞ்சிகைகளின் பயன்பாடுகள் என்ன? என் பவற்றுக்கு இச் சஞ்சிகை ஆசிரியர்கள் பதில் தேடினால் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலிருப்பதைக் காணக்கூடும். என்னைப் பொறுத்தவரையில் வாசகர்கள் கேள்வி கேட்பவர்களாகவும், ஆசிரியர்கள் பதில் சொல்பவர்களாகவும் தொடரும் பட்சத்தில் திரும்பவும் ஏமாற்றங்களையே சந்திக்க வேண்டிவரும். வாசகர்களினதும், ஆசிரியர்களினதும் இணைந்த முயற்சியில் சரியான கருத்துகள் பரவலாக்கப்பட வேண்டும். உரிய இடத்தைவிட மிகைப்படுத்தப்பட்ட ஸ்தானத்தை சஞ்சிகைக்கு வழங்குவதன் மூலம் முயற்சிகளும், எதிர்பார்ப்புகளும் இழப்புகளாவதுடன், குறிப்பிட்ட ஒரு வட்டம் திருப்திப்பட்டுக் கொள்வதாகவே முடியும்.

இந்த இடத்தில் ஏற்கெனவே சஞ்சிகைகளில் வெளியான இரண்டு கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

"மேலைநாடுகளில் குடியேறியுள்ள சிலர் தமது மனவெழுச்சிகளையும், எண்ணங்களையும் பல பத்திரிகைகளாக வெளிப்படுத்தினர். அவை விழலுக்கு இறைத்த நீராகிவிடக் கூடாது. ஈழ-இலங்கை விடுதலைக்கு உரமாக வேண்டும்" - மனோகரன் (புதிய ஜனநாயகம்; ஜனவரி'91)

" வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு இனப்பிரச்சினை தொடர்பாக பெரிய அக்கறை இருப்பதாகத் தோன்றவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் இலங்கைக்குத் திரும்பப் போவதில்லை. இனப்பிரச்சினை தீர்ந்தாக வேண்டிய தீவிரத்தை தென்னிலங்கை மக்கள் உணரும் அளவிற்கு ஐரோப்பா வாழ் தமிழர்கள் உணர்ந்திருக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் வேறு உலகத்தில் வாழ்கிறார்கள் " - வாசுதேவா நாணயக்காரா (தூண்டில்; கலம்`52)

மேற்குறிப்பிட்ட கருத்துகளை கணக்கிலெடுத்து ஆசிரியர் குழுக்கள் தங்கள் சஞ்சிகைகள் குறித்தும், வாசகர்கள் சஞ்சிகைகளுடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள வரையறைகள் குறித்தும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

எனது இக் கருத்துகள் குறித்து சஞ்சிகை ஆசிரியர்களினதும், சக வாசகர்களினதும் கருத்துகளை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

- மு.நாகேந்திரம்

---



" நான் முன்பே எச்சரித்தேன் மன்னவா, கண்ணிவெடி வைத்தவனைத் தட்ட வேண்டாம் என்று. கேட்டீர்களா?"

- இன்னான்னா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரதி நினைவாக



திருவல்லிக் கேணியிலே
அஸ்தமித்த அந்த - சி
சுப்ரமணிய பாரதியின்
மரண ஊர்வலத்திலே - அணி
வகுத்த ஜனத்திரள் - ஒரு
இருபது பேருக்கும்
குறைவேதான் என்று
குறைகூறி உன் தம்பி
இரா. வைரமுத்து...
"தரித்திரம்! தரித்திரம்!!" என்றே
தலையிலடித்துக் கொள்கிறானே!

உதித்த எட்டயபுரத்திலே
உயிரை விட்டிருந்தால் - அந்த
ஊர்வலத்தின் ஜனத்திரள்
உதிர்ந்து...
ஓரிரண்டுக் கேதான்
குறைந்தே போயிருக்குமோ?

பாடை தூக்கவாகிலும்
"அற்லீஸ்ற்" உனக்கு
நாலுபேர் இருந்தார்களே...
நீ
பாக்கியசாலிதான்
பாரதி!

சினிமாவுக்கு "செக்ஸி"யாய்
பாட்டெழுதிவிட்டு அவன்
பாடையேறியிருந்தால்...
இறுதியூர்வலம்
இப்படியா? ஓய்!

நேசித்துச் சென்றே
கஞ்சா, கஞ்சா
அருந்திப் புகைத்தே
களித்திருந்த சேரியிலே - அவன்
கதை முடிந்திருந்தாலும் - அந்தச்
சோக ஊர்வலம்
சோபையிழக்காது...

"ஜாதிகள் இல்லையடா!
பார்ப்பான்!" என்றே அல்ல, "அட
பாப்பா!" என்றே அவன்
பகன்றதைக் கூடப்
பொறுத்துக் கொள்ளாத
பார்ப்பனர்கள் பலர் - அவனது
இறுதி ஊர்வலத்திலே
கலந்து கொண்டு
அணி செய்யாது - அதைப்
"பொய்க்கொற்" பண்ணியேதான்...
சோபையிழக்கச் செய்தனரோ?

*
எம்.ராமச்சந்திரன் (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்திலிருந்து

# தேசத்தின் குறிப்புகள்

திருமலை ஆயுதக் கிடங்கு குண்டு வெடிப்பு, வானத்தில் பறந்து கொண்டிருந்த சினச்சூடை வெடித்துச் சிதறியது, டென்சில் கொப்பேக்கடுவ, விமல் விஜய ரத்ன உட்பட்ட மேல்மட்ட இரா ணுவத்தினர் மரணம் என்பன புலி களால் செய்யப்பட்டவையோ அல் லது அவற்றிற்குப் புலிகள் கார ணமோ அல்ல என்றும் அவற்றி ற்கு அரசாங்க மேல்மட்டத்தின் சதியே காரணம் என்றும் ஒரு பிரச்சாரம் இங்கு பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சாரத்தை மேற் கொள்ளுபவர்களுக்கு சாதகமான விதத்தில்தான் இச் சம்பவங்கள் நடந்துள்ளன என்பதும் ஒதுக்கி விட முடியாத ஒன்று என்ற போதிலும் இப் பிரச்சாரத்தின் பின்னாலுள்ள கருத்துப்போக்கு மிகவும் சுவையான ஒன்றாகும்.

தன்னுடைய அதிகார காலத் தில் முன்னெப்போதும் இருந்த தலைவர்களைக் காட்டிலும் பெரு மளவு அபக்கியாதி பெற்றவராக இருக்கும் ஜனாதிபதி பிரேம தாசாவும், அவருடைய அடியாட்க ளும் நடத்திவரும் தர்பார் இந் தக் கருத்துப் போக்கிற்கு மேலும் வலுவூட்டுகிறது. பத்திரிகையாளர் கள் முதல் அத்துலத்முதலியுட்பட்ட அவரின் ஆதரவாளர்கள் வரை தாக்கப்பட்ட சம்பவங்கள் இவற் றிற்கு நல்ல உதாரணமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவு கள் பற்றிய வழக்கின் தீர்ப்பு நாடு பூராவும் பிரேமதாசாவுக்கு

www.tamilarangam.net

எதிரானதாகவே அமையும் என்ற எதிர்பார்ப்பு - பிரேமாவின் ஆட்கள்.இரகசியமாக நீதிபதிகளுடன் பேரம் பேசியதாகக் கூறப்படுகிறது - தோல்வியில் முடிந்தது. கொப்பேக்கடுவவின் மரணச்சடங்கை சாக்காக வைத்து திட்டமிடப்பட்ட கலவரம் வேகமாக அடக்கப்பட்டது என்பவை எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனத்திற்கு நல்ல உதாரணங்களாகும். பிரேமதாசாவை வெல்வதற்கு - எந்தத் தளத்திலும் - பலமான அரசியல் முன்முயற்சியோ, அமைப்புப் பலமோ, அடிப்படையான ஒற்றுமையோ அற்ற எதிர்க்கட்சிகள், மேற்படி பிரச்சாரத்தை தூண்டி விடுவதில் மிகவும் அக்கறையாக இருக்கின்றனர்.

கொப்பேக்கடுவவை முன்னைய தேசிய வீரர்களான வீரபுரன், அப்பு போன்றோர்க்கு ஒப்பிட்டுப் பேசுவதன் மூலம் அவர்களை அதிமானிடர்களாகக் காட்டி - யுத்தத்தால் வெல்லமுடியாத அவர்கள் நயவஞ்சகத்தால் கொல்லப்பட்டார்கள் என்று காட்டி - சிங்கள பெருந்தேசிய வாதத்தின் 'அப்பழுக்கின்மையை' மெய்ப்பிக்க முயல்வதே இந்த எதிர்க்கட்சிகளின் முயற்சியாகும். சிங்களப் பெருந்தேசிய வாதத்தின் அசைக்க முடியாத பலம் பலவீனமடைய காரணமாக இருப்பவர் பிரேமதாசா என நிறுவுவது அதன் கிளையான இன்னொரு முயற்சி. இரண்டினதும் அடிப்படை நோக்கம் பதவி, அதிகாரம் - இவைதான்.


போருக்குப் போபவர்கள் மரணமடைவது வியப்புக்குரியதல்ல. ஆனால் எதிர்க்கட்சிகளோ மரணமோ, தோல்வியோ அற்றதொரு போரையும், சிங்களப் பெருந்தேசிய வெறியையும் இணைத்து கற்பனாவாதப் பேரலை ஒன்றைக் கட்டியெழுப்புவதன் மூலம் பிரேமதாசாவை வீழ்த்திவிடலாம் என்று நம்புகின்றனர். இந்த நம்பிக்கை தான் அவர்களது இன்றைய யுத்தத்தின் அடிப்படை. அடுத்தடுத்து வந்த பாரிய இழப்புகட்கு புலிகள் காரணமல்ல என்று நிருபிப்பது அவர்களுக்கு அவசியமாக இருக்கிறது.

எப்படியோ, இராணுவத்தின் பூமியதிர்ச்சி, பலவேகய நடவடிக்கைகள் எதிர்பார்த்ததிற்கும் மேலான வெற்றிகளை அவர்களுக்குத் தந்துள்ளன. இளவாலை, சிறுவிளான், அளவெட்டி, தெல்லிப்பளைப் பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி தம்முடைய அதிகாரத்தின் கீழ் கொண்டுவர அவர்களால் முடிந்திருக்கிறது. இன்னொரு ஒப்பிறேஷன் லிபரேஷன் (வடமாராட்சி) அனுபவத்தை - புலிகள் 'வீரமும் களத்தே போட்டு' வெறுங்கையோடு

www.tamilarangam.net

ஓடியதை - மக்கள் கண்ணாரக் கண்டார்கள். துவக்குகள் பாதை நெடுக விழுந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது!. அதிகாலையில் வீடுகளில் உறங்கிக்கொண்டிருந்த மக்களை வீடுகளின் கதவுகளைத் தட்டி எழுப்பி வெளியேறுமாறு இலங்கை இராணுவம் அறிவிக்கும்வரை ஒரு வேட்டுச் சத்தம் கூடக் கேட்காத விந்தையைப் பலரும் பேசிக் கொள்கிறார்கள். புலிகளின் 'துரோகத்தனமான' நடவடிக்கை இது என்று பேசாவிட்டாலும் அப்படி நினைக்காதவர்கள் இல்லை!. அவசரத்தில் அவசரத் தேவைகட்குப் பாவிக்கக் கூடப் பணம் எடுத்து வராதவர்கள், மருந்தைக்கூடக் கொண்டு வராத நோயாளிகள், புலிகளின் பவுண் பாஸை விட்டுவிட்டு வந்ததால் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற முடியாதவர்கள்... என்று பலரும் சுன்னாகம், கொக்குவில், மருதனாமடம் பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். கைவிட்டுவந்த, போட்டது போட்டபடியே விட்டு, போட்டிருந்த உடுப்போடு ஓடிவந்தவர்கள் திரும்பிப் போக வசதியற்றுப் போய் நிற்கிறார்கள். பாடுபட்டுச் சேர்த்த பொருட்கள் இராணுவத்தினரால் பங்கு போடப்படுவதைக் கேள்விப்பட்டு பரிதவிக்கிறார்கள். திரும்பிப்போக முயற்சித்த அளவெட்டியைச் சேர்ந்த பெண்ணொருவரின் காதுத் தோடும், மூக்குத்தியும் பிடுங்கப்பட்டதாக கடிதம் எழுதியிருந்தார்.

"எனக்கு இந்தச் சம்பவங்க



www.tamilarangam.net

ளைப் பார்க்கும்போதாவது எங்க டையாக்களுக்கு முஸ்லீம் சனத்தை அடிச்சு விரட்டியபோதும் இப்ப டித்தான் அவர்கள் வேதனைப்பட் டிருப்பார்கள் என்டு விளங்கி னால் சரி என்று தோன்றுது" என்று இரக்கமில்லாமல் அபிப்பி ராயம் சொன்னார் எனது நண்பர்.

"அது புலியள் செய்த அக்கிர மம். அதுக்கு சனங்கள் என்ன செய்ய முடியும்?" என்றேன் நான்.

"உண்மைதான். ஆனால் அந்த வேதனையை மற்றவர்களுக்கு நட க்கும்போது கண்டும் காணாதவர் கள் அனுபவித்து உணர்வது மிக வும் அவசியம். அப்போதுதான் புலிகளது நடவடிக்கைகளின் தார் ப்பரியத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்"

"அப்ப உனக்குச் சந்தோசம் தானே...?"

"இல்லை.. ஆனால் அனுபவம் மிகச் சிறந்தமுறையில் கல்வியூட் டும் என்று சொல்கிறேன்"

- பிரஜைகள் (ஈழம்)

" என்ன பேப்பறைப் பாத்திட்டு சந்தோஷப்படுறியள்? "

" நாட்டிலை சண்டை உக்கிரமா நடக்குதாம். இனி எங்களை திருப்பி அனுப்ப மாட்டாங்கள் "

- *இன்னன்னா*



www.tamilarangam.net

# எவர் தர்மராசா?

**காட்சி அமைப்பு: 1**

**" அடி.. வெட்டு.. கொத்து.. சுடு.. போடு..."**

**"வேலை.. படிப்பு.. சுதந்திரம்.."**

**"பசி.. பஞ்சம்.. நோய்....."**

***( பாஸிஸம் ஜனநாயகத்தை எழமுடியாமல் தடுக்க, தேசம் கத்திய வாறு விழுகிறது. )***

---

குரல்: உலகெங்கும் வன்முறை, அடக்குமுறை, சுரண்டல் நாடுகளுக்கு நாடு வேறுபட்டிருக்கிறது. அதை எதிர்த்த போராட்டமும் பலவழியில் வளர்ந்திருக்கிறது. எமக்கு அடக்குமுறை மன்னராட்சியில் இருந்தது; வெள்ளையர் ஆட்சியில் இருந்தது; அவர்களை விரட்டியடித்தபின்பும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. பாஸிஸக் கும்பல்களால் மறுக்கப்பட்ட உரிமைகளைப் பலவந்தமாகப் பெற, ஊண், உடை, வீடு, தொழில், மருத்துவம், மறுக்கப்பட்ட நிலையிலும், வெள்ளையர் ஆட்சியில் கண்டுபிடித்த சுதந்திரம் என்ற சொல்லுக்குப் பொருள் தேடி

www.tamilarangam.net

மக்கள் இப்போதும் இறந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையிலிருந்து இறந்த சிலரை உங்களோடு உலவ விடுகிறோம்.

---

காட்சி: 2

*கட்டியக்காரன்:* மேன்மை தங்கிய சர்வ வல்லமை கொண்ட தர்ம ராஜன் எமதர்மராஜன் வருகிறார். பராக்! பராக்!! பராக்!!!

*( எமன் பதவி, வலிமை, ஆளுமையை உணர்த்த பாடல் ஒலிக்கிறது )*

நீதி நேர்மை மாட்சி கொண்ட எந்தன் ஆட்சி பாரும்
வையகத்தில் உள்ள மக்கள் தீர்ப்பை என்னில் கேளும்
பாவ லாபக் கணக்கு இங்கு யதார்த்தம் என்றும் ஒன்று
நீதிக்காக வாழும் மக்கள் நன்மை மட்டும் கா(க்கும்)ப்பேன்

நாளும் பொழுதும் வாடும் மனிதர் வாழ்வின் அவலம் பாரீர்
உரிமைற்று சூடு வெட்டுக் கொலைகளாகி மாறி
தீர்ப்பு என்ற பெயரில் வாழும் வாழ்வு முடிந்து போகும்.

வாழ்க்கை தர்மம் மாறும் மனிதர் வாழ்வை என்றும் மாய்த்து
நன்மை தீமை பார்த்து நானே கணக்கை நின்று தீர்ப்பேன்.

அடக்கியாண்ட மன்னராட்சி வரலாற்றைக் கேளும் - அதில்
வெற்றி கொண்ட மக்களாட்சித் தர்மம்தான் பாரும்
( .... நீதி )

*எமன்:* சித்திரகுப்தா விடுமுறை முடிய விசாரணைகள் ஆரம்பிக்க வந்திருக்கிறோம். எங்கே மரணமும் கொலையும் அதிகமாக நடந்திருக்கிறதோ அந் நாட்டு விசாரணைகளை முதலில் ஆரம்பியுங்கள்.

*சித்திரகுப்தன்:* மகாப்பிரபு! இப்போ எல்லா நாடுகளிலேயும் படு கொலைகள் அதிகரித்துவிட்டது தர்மராஜா. எங்கே என்றாரம்பிப்பது? பழைய விசாரணைகள் என்று பார்த்தால் இலங்கையிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்.

www.tamilarangam.net

*எமன்:* அப்படியே ஆகட்டும்.

*சித்தி:* அப்படியானால் ஆயிரக்கணக்கில் விசாரிக்க வேண்டிவரும் தர்மராஜா! ஒவ்வொருவராக அழைத்துச் சொர்க்கத்திற்கும் நரகத் துக்கும் தள்ளிவிடுங்கள் மகாப் பிரபு.

*எமன்:* என்ன விசாரிக்காது தண்டனையா? பாவமே செய்யாதவர் களும் இருப்பார்களல்லவா? யாராவது நியாயம் கேட்டால் என்ன சொல்ல முடியும்?

*சித்தி:* தண்டனையைக் கொடுத்துவிட்டு ஏதாவது குற்றப் பட்டியலைச் சுமத்த வேண்டியதுதானே?

*எமன்:* சித்திரகுப்தரே என்ன சொல்கிறீர்?

*சித்தி:* இல்லை.. எங்களிடம் யார் நீதி கேட்கிறார்கள் என்றுதான் யோசிக்கிறேன். அந்தத் தகுதிதான் இப்போது மக்களிடம் இல் லையே. பிரபு, முன்பு மனுநீதிச் சோழன் என்ற மாமன்னன் நீதி கேட்டு வரும் மக்கள் ....

*எமன்:* அனைத்தும் அறிவேன் சித்திரகுப்தா. உயிரை உயிராய் மதித் தவன். தனயனைக் காக்காது தர்மத்தைத்தான் காத்தவன். இப் போதோ மிருகங்களுள்ளும் கேவலமாக மனிதர்கள். அறிவேன் சித் திரகுப்தா. நாழியாகிறது. விசாரணைகளை ஆரம்பியுங்கள்.

*சித்தி:* பீம்சிங்! பீம்சிங்!! பீம்சிங்!!!

*எமன்:* என்ன பெயரே விநோதமாக இருக்கிறதே. இவரென்ன குத்துச்சண்டை வீரரா?

*சித்தி:* இல்லை பிரபு. வறுமையில் வாடி வேலையில்லாததினால் இந் தியக் கூலிப்படையில் சேர்ந்தவர். தலைமைக்குப் பணிந்து சிக்கிம், காஷ்மீர், வங்கம், இலங்கை என்று அட்டகாசம் போட்டவர். காலத் துக்காலம் இவர்களுக்கு வெவ்வேறு குழுக்களின் ராஜமரியாதை. இருந்தாலும் இப்போ...

www.tamilarangam.net

*ஏமன்:* இப்போ என்ன ஆகிவிட்டது?

*சித்தி:* ஒப்பந்தம் பிளவுபட்டது குற்றமாகிவிட்டது பிரபு.

*ஏமன்:* என்ன! ஒப்பந்தம் பிளவுபட்டது குற்றமா? எந்த ஒப்பந்தத்தைச் சொல்கிறீர்? ஒரு பிரயோசனமும் இல்லாமல் இழப்புகளை மட்டும் ஏற்படுத்திய இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைச் சொல்கிறீரோ?

*சித்தி:* ஆமாம் பிரபு. அவர் இறுதிக் காலங்களில் எப்படி வாழ்ந்தார் என்று நீங்களே பாருங்களேன்.

குரல்: *அவர்களை நம்பாதீர்கள்*

*( பாத்திரங்கள் அசையாநிலையில் கவிதை ஒலிக்கிறது )*

இப்போதும் நீங்கள்...
இல்லை! இன்னும் இன்னும் வெறித்தனமாக
நீங்களும்
உங்கள்... " கரங்களும் "



www.tamilarangam.net

உங்கள் வருகையால்
கண்ணீரை ஒற்றிவிட்டு
விழிகளில் குத்தினீர்கள்.
எதிர்பார்ப்புகள் எல்லாம்
அப்பாவித்தனத்தின் பிரசவங்களாகி
மடிந்து போயின.

வாழ்வின் நரம்புகளை
அறுத்தவர்கள்
நீங்கள் மட்டுமில்லை என்பதால்தான்
குமுறும் உணர்வுகள்
ரத்தப் படிவின் கீழ்
மௌனித்தன.

புரிந்துகொள்ளுங்கள்!

பூமியைப் பிளந்து எழும்
முளைப்புகளின் வலிமையறியா
நீங்களும்
நம்பிக்கையுடன் இருக்கும்
நாங்களுமாய்
கருவுற்றிருக்கிறது
எமது தேசம்!

*எமன்:* ஓ.. இதில் இறந்தவர்தானா இவர்? சரி.. சரி.. நீர் என்ன சொல்கிறீர்?

*( வீரன் மௌனம் )*

*எமன்:* சித்திரகுப்தா என்ன மௌனம் சாதிக்கிறார். எங்களை அவ மதிக்கிறாரா?

*சித்தி:* கோபப்படாதீர்கள் பிரபு. அவர் இறுதியாக இலங்கையில் அமைதிப்படையில் இருந்தவர். அதுதான் அமைதியாக இருக்கிறார்.

*எமன்:* இருக்கட்டும், இருக்கட்டும். அடக்குமுறையில் நம்பிக்கை

www.tamilarangam.net

*நட்புடன் வாசகர்களுக்கு.*

*தவிர்க்கவியலாத காரணங்களினால் செப்ரெம்பர்-டிசம்பர் மாதங்களுக்குரிய கலங்களை இணைத்து 53+54ஆவதாக இத் "தூண்டில்" வெளிவருகிறது. இத்துடன் சந்தாதாரர்களுக்கு "சரிநிகர்" இதழ் 18 இலவசமாக இணைக்கப்பட்டுள்ளது . உங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு மன்னிப்புக் கோருகிறோம். மீண்டும் ஜனவரி 1993இலிருந்து ஒழுங்காக "தூண்டில்" வெளிவர முயற்சிகள் எடுக்கின்றோம். டிசம்பர் 1992உடன் சந்தா முடிவடைபவர்கள் இவ் வருட முடிவிற்குள் புதுப்பித்து உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம். இலங்கை. இந்தியாவுக்கு அனுப்பப்படும் நூற்றுக்கு மேற்பட்ட இலவசப் பிரதிகளினால் ஏற்படும் நிதி நெருக்கடியை எதிர்கொள்ள உங்கள் உதவியைக் கோருகிறோம். தொடர்ந்தும் உங்கள் ஒத்துழைப்புகள் மூலம் ஊக்கம் தருவதுடன், விமர்சனங்கள், கருத்துகள் மூலம் நெறிப்படுத்துங்கள்.*

*நட்புடன்,*
*கடலோடிகள்*

கொண்டவர்கள் நீதியை மறுப்பவர்கள், உண்மையை மறைப்பவர்கள் எல்லோருமே விலங்குகளையும் விடக் கேவலமானவர்கள். எல்லோரையும் ஒன்றாக விலங்கோடு கூட்டிலடையுங்கள். அடுத்த விசாரணையை ஆரம்பியுங்கள் பார்க்கலாம்.

*சித்தி:* ரஞ்சன் வசந்தன்! ரஞ்சன் வசந்தன்!! ரஞ்சன் வசந்தன்!!!

*எமன்:* என்ன இருவரை அழைக்கிறீர்கள். எப்படி விசாரிக்க முடியும் சித்திரகுப்தரே?

*சித்தி:* அவர் ஒருவர்தான் தர்மராஜா. இருநாடுகளில் இருந்ததால் அவருக்கு இரண்டு பெயர்கள்.

*எமன்:* ஓ.. அப்படியா! என்ன குற்றம் செய்ததற்காகக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?

*சித்தி:* பத்திரோலுக்காக காலை முதல் மாலை வரையும், சகோதரியின் சீதனத்திற்காகவும் உழைத்தவர். ஆனாலும் இவருடைய சீதன எதிர்பார்ப்பால் வேறொருவர் பெற்றோல் குடிக்கக் காரணமாகிவிட்டார் பிரபு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*எமன்:* சங்கிலிபோல் தொடர்கிறதே சீதனம். அவமானம்.. அவமானம். அதற்காகத்தான் கொண்டு வந்தீர்களா?

*சித்தி:* இல்லைப் பிரபு. கட்டைப் புத்தகத்தில் கார் ஓடி அடிபட்டதால் தானாகவே இப்போது இங்கே வந்திருக்கிறார். பூலோகத்தில் இருந்தால்கூட இவர் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டிருப்பார் பிரபு.

*எமன்:* ஓ.. அப்படியா செய்தி. அப்படியானால் அவருடைய பூலோகக் காலம் முடியும்வரை பங்கரில் வையுங்கள். இலங்கையில் இருந்தாலும் சுதந்திரமின்றி பங்கரில் முடங்கியிருக்க வேண்டியவர்தானே. அடுத்த விசாரணையை அழையுங்கள் பார்க்கலாம்...

*சித்தி:* அப்துல் அன்பரசன்! அப்துல் அன்பரசன்!! அப்துல் அன்பரசன்!!!

*எமன்:* என்ன மீண்டும் இரண்டு பெயர்களா? இவரும் பழசில் இருந்தவர்தானே?

*சித்தி:* இல்லைப் பிரபு. இயக்கத்தில் இருந்ததினால் இவருக்கு இரண்டு பெயர்கள். இறந்தபின்பு இன்னுமொரு பதவி, பட்டப் பெயர் கூடியிருக்கிறது பிரபு.

*எமன்:* இன, மத ஒற்றுமையை வலியுறுத்த இரண்டு பெயர்கள் போலும். என்ன அது... ஏதோ கருவி ஒன்றைக் கையில் வைத்திருக்கிறாரே?

*சித்தி:* ஆமாம் பிரபு. அதற்குத்தான் துப்பாக்கி என்று பெயர். அதனால் சுட மட்டும்தான் முடியும். அவருக்கும் அது மட்டுந்தான் தெரியும். அவர் உறங்கும்போதும் கூட அதோடுதான் உறங்குவார். இன்றுவரை அவர் தன்னைத்தானே கூடக் கேள்வி கேட்டுப் பார்த்ததில்லை. ஏன் துவக்கை ஏந்தினார் என்று அவருக்கே தெரியாது?

*எமன்:* அப்படியானால் அவர் எங்களையும்....?

*சித்தி:* எங்களையும் சுட்டுவிடுவாரோ என்று கேட்கப் போகிறீர்கள். அவரிடம் கேள்வி கேட்க வேண்டாம் பிரபு. அவர் ஓடர் வந்தால்தான் சுடுவார். பயப்படாதீர்கள்.

www.tamilarangam.net

*எமன்:* கேள்வியையும் கேட்கக் கூடாது என்கிறீர். பெயரைப் பார்த்தால் இன. மத. ஒற்றுமையை வலியுறுத்த வைத்த பெயர்போல் தெரிகிறது. அப்படியானால் ஏன் இங்கு வந்தாரென்றாவது....

*சித்தி:* பின்னால் நடந்த சம்பவங்களை வைத்துப் பார்த்தால்... விளம்பரத்துக்காக வைத்துக்கொண்ட பெயர்போல் இருக்கிறது. இன்று முஸ்லிம் மக்களுக்கு பிறந்த மண்ணில் வாழும் உரிமைகூட மறுக்கப் பட்டிருக்கிறது பிரபு. மக்களின் உரிமையை வென்றெடுக்கப் புறப்பட்டவர்களின் ஆயுதங்கள் இன்று மக்களையே வேட்டையாடுகிறது பிரபு.

*எமன்:* ஓ.. நடந்தது இதுதானா? அப்படியானால் இவரையும் விலங்கோடு விளக்கமறியலிலே வையுங்கள். என்ன சித்திரகுப்தரே யாருமே ஆயுட்காலம் முழுவதையும் பூமியில் கழித்தவர்கள் கிடையாதா?

*சித்தி:* யாரைக் கொல்லலாம், யாரைக் கொல்லலாம் என்று இதற்கென்றே அலைகிறார்கள் பிரபு. ஆளுக்கு ஆள் கையும், பலமும் மாறினாலும் மக்கள் ஆயுதத்திற்குப் பயந்துதான் சீவிக்கிறார்கள். இப்போது பூலோகத்திலேயே விதி நிர்ணயிக்கப்படுகிறது பிரபு. வருகிற வழக்குகளைப் பார்த்து நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

( தொடரும் )

- தேவன்


அடுத்த தூண்டிலில்....

*???? காணாமற் போகும் பெண்கள் !!!!*
*???? பிச்சை !!!!*
*???? எதிர்கால அவலங்கள் !!!!*
*???? உழைப்பின் உயிர்ப்பு !!!!*
*???? தேவை !!!!*
*???? ஏன் எதிரிகள் ஆனோம் !!!!*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகதிகள் அகதிகளாக

ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை. கிழக்கு ஜேர்மனியை மேற்கு ஜேர்மனி தன்னுடன் இணைத்துக்கொண்ட நாள். கடந்த 2 வருடங்களிலும் இத் தினத்தில் கொண்டாடப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இந்த வருடம் இல்லை. மாறாக ஜேர்மனி அரசினதும், அரசியலினதும் முகமூடியைக் கிழித்துக் காட்டுவதாகவே இத் தினம் அமைந்தது.

சம்பிரதாயபூர்வமான நிகழ்ச்சிகளை அரசும், பிற பாராளுமன்றக் கட்சிகளும் பலத்த பாதுகாப்புடன் குறுகிய நேரத்தில் நடத்தி முடித்த அதே நேரம் ஜேர்மனியின் அனைத்துப் பாகங்களிலும் குறிப்பிடத்தக்க 3 நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதலாவதாக, சென்ற வருடம் செப்ரெம்பர் மாதம் Hoyerswerda நகரில் உள்ளூர் வாசிகளின் பலத்த ஆதரவுடன் நாஸிகளினால் அகதிகள் எரித்துக் கொல்லப்பட்ட பின், இவ்வருடம் ஒகஸ்ற் மாதம் Rostock நகரில் நாஸிகளினால் நான்கு தினங்களுக்கு மேல் தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட அகதி முகாம் தாக்குதலையும், அன்றிலிருந்து இன்றுவரை நாளொன்றுக்கு 20க்கு மேற்பட்ட அகதி முகாம்கள் நாஸிகளின் தாக்குதலுக்குள்ளாகி வருவதையும் கண்டித்தும், எதிர்த்தும் நிறவெறி-பாஸிஸ எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. Frankfurt இல் நடைபெற்ற ஊர்வலத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களும் Berlinஇல் நடைபெற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கானவர்களும் கலந்துகொண்டனர். இதைவிட நிறவெறித் தாக்குதல்கள் உக்கிரமடைந்துள்ள முன்னாள் கிழக்கு ஜேர்மனியின் பகுதிகளிலும் பெருமளவில் மக்கள் பங்கெடுத்த ஊர்வலங்கள் நடந்தன.

இரண்டாவதாக, கிழக்கை மேற்கு ஜேர்மனியுடன் இணைத்துக் கொள்வதற்கு முன் மேற்கு ஜேர்மனியில் Helmut Kohl தலைமையிலான அரசு அள்ளி வீசிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தங்களை ஏமாற்றியதைக் கண்டித்து கிழக்கு ஜேர்மனி பகுதிவாழ் மக்கள் துக்க தினம் அனுஷ்டித்ததுடன், கறுப்புக் கொடிகளுடன் கண்டன ஊர்வலங்களும் வைத்தனர். பொதுக் கூட்டம் ஒன்றில் பங்குபற்றிய Kohl அங்கிருந்த பலருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, ஒருவரிடம் இருந்து அடியும் வாங்கிக் கட்டிக் கொண்டார். கூழ்முட்டையும் வீசப்பட்டது. சென்ற வருடமும் Kohl க்கு கிழக்கு ஜேர்மனியத் தொழிலாளர்கள் கூழ்முட்டை, அழுகிய தக்காளிப் பழங்களால் அபிஷேகம் செய்திருந்தனர்.

மூன்றாவதாக, கிழக்கு-மேற்கு ஜேர்மனிய இணைவு தமது வெற்றி. பெரிய ஜேர்மனி தாங்கள் கனவு, அகதிகளையும், வெளிநாட்டவர்களையும் எரித்துக் கொல்லுவோம்- விரட்டுவோம்... என்ற கோஷங்களுடன் பல்வேறு நாஸிக் குழுக்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெற்றன. அகதிகளைக் கொலை செய்ய வேண்டும், சித்திரவதை செய்ய வேண்டும் என்று தூண்டும் இசை நிகழ்ச்சிகளும் நாஸிகளால் நடாத்தப்பட்டன.

மேற்குறித்த நிகழ்வுகள் ஜேர்மனியின் குறுக்குவெட்டு முகத்தின் ஒவ்வொரு பக்கத் தோற்றங்களாகும். இந் நிகழ்வுகள் வெளிநாடுகளின் பார்வையில் ஜேர்மனி குறித்தான ஒரு கருத்தாக்கத்தை உருவாக்கியிருப்பதுடன், ஜேர்மனியிலும் பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றினால் நாடுபூராவும் ஒருவிதமான கொந்தளிப்பும், குழப்பமும் ஏற்பட்டுள்ளன.

## நிறவெறித் தாக்குதல்கள்

இவ்வருடம் ஒகஸ்ற் மாதம் 23ஆம் திகதி Rostock நகரிலுள்ள அகதிமுகாமைச் சுற்றிவளைத்த நிறவெறியர்கள் நடாத்திய தாக்குதலுடன் ஜேர்மனியின் அரசியல்-பொருளாதார நிலமைகள் இன்னும் "சூடு" பிடித்துள்ளன. முகாமுக்குள்ளிருந்த 150 வியட்நாமிய தொழிலாளர்களை உயிரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டன் கொளுத்துவதற்கு நாஸிகள் முயற்சி செய்ததும், இப் பயங்கர வாதத்திற்கு 2 ஆயிரத்திற்கும் அதிகமான உள்ளூர்வாசிகள் திரண்டுவந்து இரவு பகலாக உற்சாகமளித்ததும், எரிந்துகொண்டிருந்த கட்டிடத்திலிருந்து வியட்நாமியர்களைக் காப்பாற்ற பொலிஸோ, தீயணைக்கும்படையோ உடனடியாக வராததும் எதிர்காலத்தில் உலக அரங்கில் ஜேர்மனி வகிக்கப்போகும் பாத்திரம் குறித்தான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன.

நாஸிகளால் இத்தகைய தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக Rostock இல் வெளியாகும் இரண்டு தினசரிப் பத்திரிகைகளுக்கு தாக்குதல் நடப்பதற்கு 3 தினங்களுக்கு முன்பே அநாமதேய தொலைபேசி எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. இந்த எச்சரிக்கை அவ்விரு பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இது குறித்து நகராட்சிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் அகதிகளுக்குப் பாதுகாப்பளிப்பது குறித்து எந்தக் கவனமும் காட்டப்படாது அலட்சியப்படுத்தப்பட்டது. பொலிஸாருக்கும் தீயணைக்கும் படையினருக்கும்கூட இச் செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தும் முற்கூட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எதிலும் அவர்கள் ஈடுபடாததுடன், 4 நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட தாக்குதலின்போது அகதிகள் தங்கியிருந்த முகாமையே இவர்கள் நெருங்கவில்லை.



Alles unter Kontrolle

www.tamilarangam.net

ஜேர்மனியின் பல பாகங்களி லிருந்தும் நாஸிகள் அழைக்கப் பட்டு இத் தாக்குதலில் ஈடுபட்ட தும், முகாமை யாரும் நெருங்கி அகதிகளுக்கு உதவ முடியாத வாறு வியூகம் அமைத்துத் தாக்கி யதும், சக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவிகள் மூலம் தாக்குதலையும், எதிர்த் தாக்குதலையும் ஒழுங்கு படுத்தியதும் இதுகால வரையான நாஸிகளின் நிறவெறித் தாக்குதல் தற்போது திட்டமான யுத்த வடி வத்தைப் பெற்றிருப்பதைக் காட்டி யிருக்கின்றன.

அகதிகள் மீதான தாக்குதலுக் கும், அதற்குப் பெரும்பாலான மக்கள் ஆதரவளிப்பதற்கும் கார ணம் அவர்களின் பொருளாதார-சமூக தாழ்வு நிலையே என்று கூறப்படுகிறது. இது ஒரு பகுதி உண்மையே தவிர முற்று முழு தான உண்மையல்ல என்பதை, அகதிகளை ஏன் எதிர்க்கிறீர்கள் என்ற கேள்விக்கான உள்ளூர்வாசி களின் பதில்களில் காணலாம்.

"அகதிகளை உயிருடன் விடக் கூடாது; அவர்களைக் கொல்ல வேண்டும்"
"அகதிகள் அழுக்கானவர்கள்"
"அகதிகள் காட்டுமிராண்டிகள்"
"அகதிகள் கொள்ளைக்காரர்கள்"
"அகதிகள் பூனையை வாட்டிச் சாப்பிடுகிறார்கள்"
"எங்கள் மனைவி, குழந்தைகளை அகதிகள் கற்பழிக்கிறார்கள்"
"நாள் முழுக்கச் சும்மாயிருந்து கும்மாளமடிக்கிறார்கள்"
"தெருவில் மலங் கழிக்கிறார்கள்"
"நோய்களைப் பரப்புகிறார்கள்"


இவை அப்பட்டமான நிறவாத கருத்தியல்களே. ஹிட்லரின் கால த்தில் எழுச்சி பெற்ற மனோ பாவம் இரண்டாம் உலக யுத்தத் தின்பின் கீழ் அமுங்கியிருந்தது. இப்போது அது மீண்டும் எழுச்சி பெற்றுவருகிறது.

மக்களின் "நிறவெறி எழுச்சி" யைக் கிளறுவதையே கருத்தாகக் கொண்ட அரசியல் கட்சிகள் இத ற்கேற்ப தமது செயற்பாடுகளை யும் முடுக்கி விட்டுள்ளன. எரியும் கட்டிடத்திற்குள் அகதிகள் உயிரு க்காகப் போராடிக் கொண்டிருக் கையில் Mecklenburg-Vorpòmmens மாநில உள்துறை அமை ச்சர் உதிர்த்த பொன்மொழிகள் இவை: "இந்தத் தாக்குதலில் வெளிப்பட்ட எனது வாக்காளர்க ளின் உணர்வை நான் புரிந்து கொள்கிறேன். அதை மதிக்கி றேன்". இதற்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் எதிர்க்கட்சியான SPDயின் தலைவர் Enholm தெரிவித்ததாவது: "அகதிகளால் தான் இவ்வளவு பிரச்சினைக ளுமே". பாராளுமன்றப் பேச்சாள ரான Süssmuth : "அரசியல் தஞ்சச் சட்டத்தை மாற்றுவதைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தவிர வேறொன்றும் செய்ய முடியாது"

அகதிகளை எரித்துக்கொண்டிருந்த தீயில் இவர்கள் எண்ணெய் வார்க்க அது இன்னும் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கிறது. அகதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதைப் பற்றியோ, வன்முறையில் ஈடுபட்டுள்ள நாஸிகளைக் கைது செய்வது பற்றியோ ஒரு வார்த்தை கூடத் தெரிவிக்காமல் அகதிகளை வெளியேற்ற வேண்டும், அரசியல் தஞ்சம் வழங்கும் சட்டத்தை நீக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் எல்லாம் ஓலமிடத் தொடங்கிவிட்டன. இக் கோரிக்கைகளை ஏற்கெனவே முன்வைத்த ஆளும் கூட்டணிக்கட்சிகளான CDU/CSU உடன் இன்று பிரதான எதிர்க்கட்சியான சிவப்புச்சாயம் பூசிய SPD யும், இடதுசாரி முகமூடி போட்டிருந்த GRÜNEN உம் "நாங்களும் நீங்களும் ஒன்றுதான்" என்று இணைந்துள்ளன. இவர்களின் கூட்டணியால் பிரச்சார சாதனங்கள் முழுவதிலும் பெருமளவு இடம்பிடித்துள்ள விடயம் அகதிகளை விரட்டுவதும், தஞ்சத்தை நிறுத்துவதுமாகும். "நாங்கள் பல வருடங்களுக்கு முன்னர் சொன்னதைக் காதில் போட்டுக்கொள்ளாத இந்த அரசியல் கட்சிகள் இவ்வளவு வருடங்கள் கழித்து இப்போது தான் நாங்கள் சொன்னதைத் திருப்பிச் சொல்லுகின்றன" என்று தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் பெருமிதமடைகிறான் Republikaner என்ற நாஸிக்குழுவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவன் Schönhuber.

## அரசின் நாஸிஸம்

நாஸிகளினதும், ஏனைய வலதுசாரி, நிறுவெறியர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை ஜேர்மனிய அரசு மூன்று விதங்களில் தனக்குச் சாதகமாக வளர்த்து வருகிறது.

முதலாவது, ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள மூன்றாம் உலகநாட்டு அகதிகளை அவர்களாகவே தமது சொந்த நாட்டுக்கு ஓடும்படி செய்வது. இதைச் சாத்தியமாக்குவதற்கு அரசு கைக்கொள்ளும் வழிமுறைகளில் ஒன்று நாஸிகளின் தாக்குதல், மற்றையது இத் தாக்குதல்களினால் இன்று எழுந்துள்ள அரசியல் தஞ்சம் வழங்கும் சட்டத்தை நீக்கு என்ற கோரிக்கை. இதில் அரசு வெற்றிகண்டு வருகிறது.

இரண்டாவது, அரசின் அரசியல் கொள்கைகளுக்கு அச்சுறுத்தலாகவும், இடையூறாகவும் உள்ள இடதுசாரிகளையும், முற்போக்கு உதிரிகளையும், ஜனனாயகவாதிகளையும் அடக்குவது. இதிலும் அரசால் இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. ஒருபுறம் பொலிஸின் பலத்த பாதுகாப்புடனும், ஆதரவுடனும் செயற்படும் ஆயுதபாணி நாஸிக் குழுக்கள் இடதுசாரிகளைத் தாக்கியும், கொலை செய்தும் வருகின்றனர். மறுபுறத்தில் நாஸிஸத்திற்கும், அடக்குமுறைக்கும் எதிராகவும், அகதிகளுக்கு ஆதரவாகவும் இடதுசாரிகளால் மேற்கொள்ளப்படும் ஜனனாயக நடவடிக்கைகள், வெகுசன நடவடிக்கைகள்கூட நீதிமன்றங்களினால் தடைசெய்யப்படுவதுடன், இவற்றில் ஈடுபடுவோர் ஆயுதம் வைத்திருந்தார்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்படுகிறார்கள். அதிரடிப் பொலிஸ் படையினரால் மிருகத்தனமாகத் தாக்கப்படுகிறார்கள்.


Rostockஇல் அகதிகள் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு ஆறாவதுநாள் அந் நகரையும், அதனை அண்மிய நகர்களையும் சார்ந்த சுமார் 30 ஒட்டோனொமன்களால் தாக்குதலை எதிர்த்து ஆர்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டபோது, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு 30 மணித்தியாலங்களுக்கும் மேலாக உணவு, குடிநீர் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

இதன் பின்னர் 5ஆம் திகதி சனிக்கிழமை பெரியளவிலான எதிர்ப்பு ஊர்வலம் பாஸிஸ எதிர்ப்புக் குழுக்களின் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது. அகதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

களை நாஸிகள் உயிருடன் கொளுத்த முயன்று கொண்டிருந்தபோது 5 நாட்களாக 'கடமை'யில் ஈடுபட்டிருந்த பொலிஸின் தொகை 150 பேர் மட்டுமே. ஆனால் பாஸிஸ எதிர்ப்புக்குழுக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலத்தைக் "கண்காணிக்க" ஊர்வல நாளுக்கு முதல்நாளே 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசேட பொலிஸாரும், இராணுவத்தினரும் Rostock இல் குவிக்கப்பட்டனர். 25இற்கும் மேற்பட்ட ஹெலிக்கொப்ரர்களும், கவச வாகனங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டன. ஊர்வலத்தில் கலந்து கொள்ள Hamburg இலிருந்து சென்ற 500க்கும் மேற்பட்ட பாஸிஸ எதிர்ப்பாளர்கள் வழியில் வைத்து பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டு 6. மணித்தியாலங்களுக்கும் மேலாக அதே இடத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். Rostock நகருக்குச் சென்ற ஏனையோருக்கு நகருக்குள் ஊர்வலமாகப் போக அனுமதி மறுக்கப்பட்டு நகருக்கு வெளியே பரந்த வெளி ஒன்று ஒதுக்கப்பட்டது. எனினும் அங்கு திரண்டிருந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாஸிஸ எதிர்ப்பாளர்கள் பொலிஸின் தடைகளை உடைத்துக்கொண்டு நகருக்குள் பிரவேசித்து திட்டமிட்டபடி ஊர்வலத்தை நடத்தினர் இதனால் ஆத்திரமடைந்த பொலிஸ் 200க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து ஆயுதம் வைத்திருந்தார்கள் என்று பொய்க் குற்றம் சாட்டி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு



Lieb' Vaterland, magst ruhig sein

www.tamilarangam.net

சென்றது.

மூன்றாவதாக, வேலையில்லாத் திண்டாட்டம், விடில்லா நிலமை, பொருட்களின் விலை யேற்றம், சூழல் மாசு போன்றவற்றால் பாதிக்கப்படுகின்ற மக்களின் ஆத்திரம் தன் மீது திரும்பாமல், அகதிகள் மீது திருப்புவதிலும் அரசு வெற்றியடைந்துள்ளது. ஜேர்மனிக்கு வருகின்ற அகதிகள் எல்லோரும் பொருளாதார அகதிகளே என்றும், வெளிநாட்டவரால் தான் வேலையில்லாத நிலமை ஏற்பட்டுள்ளதென்றும், குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குக் காரணம் அகதிகளே என்றும் அரசும், நாஸிகளும், வெகுசனத் தொடர்புச் சாதனங்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருவதில் பெரும்பாலான மக்களின் கோபம் அகதிகள், வெளிநாட்டவர் மீது திரும்பி அகதிகளை விரட்டுவது என்று ஆரம்பித்து இப்போது நாஸிகளுடன் இணைந்து கொலை செய்வதில் முடிந்துள்ளது.

## எதிர்விளைவுகள்

ஜேர்மனிய அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகள் அரசுக்குச் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ள போதும், சில எதிர்விளைவுகளையும் உண்டு பண்ணியுள்ளது.

Rostock இல் இடம்பெற்ற அகதி முகாம் எரிப்பின் பின் ஜேர்மனிக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் தொகை சடுதியாக வீழ்ச்சியடைந்திருப்பதாக உல்லாசப் பிரயாணிகள் முகவர் நிலையங்கள் அறிவித்துள்ளன. ஜேர்மனியில் வளர்ந்து வரும் நாஸிகள் உல்லாசப் பிரயாணிகளுக்கும் அச்சுறுத்தலாக இருப்பதே இதற்குக் காரணமாகும். நாஸிகளின் தாக்குதல்களை காரணமாகக் காட்டி கிழக்கு ஜேர்மனிப் பகுதியிலுள்ள பல வெளிநாட்டு முதலீட்டு வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டுள்ளன. பல வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு முதலிட மறுத்துள்ளன. இதனால் பொருளாதாரத்தில் கணிசமானளவு பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுப் பத்திரிகைகள் குறிப்பாக ஐரோப்பியநாட்டு பத்திரிகைகள் ஜேர்மனியை நாஸிகளின் நாடாகவே வர்ணிக்கின்றன. ஹிட்லரின் காலம் திரும்பி வருகிறது என்பதுபோன்ற பிரச்சாரங்கள் ஜேர்மனிக்கு அவமானத்தை ஏற்படுத்தி வருவதாக Kohl உட்பட பலரும் "கவலை" தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்திலும் அரசின் நரித் தந்திரங்கள் வெளிப்படாம



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லை. நாஸிகளின் தாக்குதல் நடக்கும் போதெல்லாம் ஜேர்மனியில் இடதுசாரிகளின் தீவிரவாதம் அதிகரித்துவிட்டதாக அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். வன்முறையில் பெருமளவில் இடதுசாரிகளே ஈடுபடுவதாகவும், இவர்கள் பயங்கர ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் குற்றம் சாட்டுகிறார்கள். மறுபுறம் சட்டரீதியிலோ, அரசியல் ரீதியிலோ அகதிகளுக்கு பாதுகாப்பளிப்பத பற்றி எதுவும் கதைக்காமல், அகதி முகாம்களை எரிப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது என்ற கோஷத்துடன் பிரம்மாண்டமான ஊர்வலங்கள் ஆளும் கட்சியாலும், எதிர்க்கட்சிகளாலும் நடாத்தப்படுகின்றன. இரட்டைவேடம் போடும் இக் கட்சிகளின் கூட்டை Republikaner தலைவன் Schönhuber உடைத்துள்ளான்: "முன்பு இடதுசாரிகளை அழிக்க எங்களுக்கு ஆதரவு தந்து வளர்த்தார்கள். இப்போது எங்களை அழிக்க யாரை வளர்க்கப் போகிறார்கள்?".

## இடதுசாரிகள்

ஜேர்மனியில் மரபுவாத இடதுசாரிக் கட்சிகள், இடதுசாரிகள் அகதிகளின் பிரச்சினை பற்றி இன்னமும் விவாதித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் கருத்தைப் பகிரங்கப்படுத்தாமல் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றனர். சில கட்சிகள் வெளிப்படையாகவே வலதுசாரியாகத் தம்மை இனங்காட்டியுள்ளன. இதனால் அதிருப்தியுற்று வெளியேறி உதிரிகளாக உள்ளோரும், சிறிய பாஸிஸ எதிர்ப்புக் குழுக்களும், தனிநபர்களுமே இன்று அகதிகளில் அக்கறை காட்டி வருகின்றனர். இவர்களின் பலத்தின் அடிப்படையில் செயற்பாடுகள் குறுகியதாகவே மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. அத்துடன் இரகசியப் பொலிஸாரின் கண்காணிப்புக்கும், தாக்குதலுக்கும் உள்ளாவதாலும் இவர்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களும் தொடர்ந்து எவ்வளவு காலம் இப்படி இயங்குவார்கள் என்பது இவர்களது நம்பிக்கையையும் பொறுத்தது.

## அகதிகள்

ஜேர்மனியில் வளர்ந்துவரும் பாஸிஸத்திற்கு முகம் கொடுப்பதற்கு தயாராக துருக்கிய, குர்திஸ்தான் அகதிகளும் அமைப்பாக உள்ளனர். இவர்களின் பல ஸ்தாபனங்கள் இறுக்கமான வடிவத்தைக் கொண்டிருப்பதுடன் திட்டமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றன. ஜேர்மனியக் குழுக்களுடனும் நட்புறவை இவர்கள் கொண்டுள்ளனர். இவர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்தாக ரோமா-ஸிந்தியினர் தங்களுக்கிடையில் இறுக்கமான கூட்டமைப்பைக் கொண்டுள்ளனர். அத்துடன் இவர்கள் எந்த ஜேர்மனிய ஸ்தாபனத்தையும் பெரிதாக நம்ப விரும்பவில்லை. கடந்த காலங்களில் தாம் சந்தித்த கசப்பான அனுபவங்களினால் தம் பலத்தை மட்டும் நம்பி செயற்படுவதற்கே இவர்கள் விரும்புகின்றனர்.

தமிழ் அகதிகளின் நிலை எல்லோராலும் அறியப்பட்டதே. தமிழர் என்ற வட்டத்தைவிட்டு இன்னும் எந்த நகர்வையும் காண முடியவில்லை. நாஸிகளின் தாக்குதலால் வேறு நாடுகளுக்கு ஓடிவிடலாம் என்பதையே பலர் தீர்வாகக் கொண்டுள்ளனர். இன்னும் பலர் இந்தப் பிரச்சினையை கவனத்தில் கொள்ளவேயில்லை.

உருவாகப் போகும் ஐரோப்பிய ஒன்றியத்தில் நாஸிகளின் பலமும், தொகையும் அதிகரிக்கப் போவதும், பாஸிஸ எதிர்ப்பு பலமாக இல்லாத பட்சத்தில் நிற-இனவெறி கருத்தியல் பரவி வளர்ச்சியடையும் என்பதும் எதிர்பார்க்கப்படும் அபாயங்களாகும்.

\- பாரதி

OOOOOOOOOOOOOOOOOOO


# தூண்டில்

செப்ரெம்-ஒக்ரோ-நவ-டிசம்பர்
கலம்: 53+54 1992

ஆசிரியர் குழு: கடலோடிகள்



: THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
46oo Dortmund 1
Germany

: (o231) 13 66 33


1993ஆம் வருடத்திற்கான புதிய சந்தா விபரங்களை 'இரவல் தூண்டில்' இல.5+6 இல் பாருங்கள்.

'தூண்டில்' கலம் 55 ஜனவரி 1993இல் வெளிவரும்.


தபாற்கணக்கு இல. 3o8 o74 68
Postscheckamt Dortmund
BLZ 44o 1oo 46


*சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தாவை அனுப்பியதும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*நவம்பர்'90:*
எதியோப்பிய அகதி கொலை
அங்கோலா அகதி கொலை
குர்திஸ்தானிய அகதி கொலை
*சனவரி'91:*
டொச் இளைஞன் கொலை
*பெப்ரவரி'91:*
ஆப்கானிஸ்தான் அகதி கொலை
*மார்ச்'91:*
மொஸம்பிக் அகதி கொலை
*ஏப்ரல்'91:*
இரவிரவாக அகதிகள் ஓட்டம்
*மே'91:*
செர்னோபில் குழந்தைகள் தாக்குதல்
*யூன்' 91:*
பிரயாணி ஒருவர் கொலை
*யூலை'91:*
அராபியர் காயம்
*ஓகஸ்ற்'91:*
எரிகாயங்களுடன் அகதிகள்

ஓய்வூதியகாரர் கொலை
*செப்ரெம்பர்'91:*
கானா அகதி எரித்துக் கொலை
*ஒக்ரோபர்'91:*
2 லெபனான் குழந்தைகள் எரிப்பு
*நவம்பர்'91:*
35 அகதிகள் காயம்
*டிசம்பர்'91:*
ருமேனிய அகதி கொலை
*சனவரி'92:*
டொச் இளைஞன் கொலை

இலங்கைக் குடும்பம் தீக்கிரை

*மார்ச்'92:*
ருமேனிய அகதி காயம்
*ஏப்ரல்*
வியட்நாமியர் கத்திக்குத்து
*மே'92:*
பங்ஸ் கொலை
*யூன்'92:*
இடதுசாரிகளுடன் மோதல்
*யூலை'92:*
யூகோஸலாவிய அகதிகள் தாக்குதல்
*ஓகஸ்ற்'92:*
ஸிந்தி, றோமா அகதிகள் தாக்குதல்

